Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | புரட்டாதி 24 புதன்கிழமை (10.10.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 010

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



ஜம்பம் பலிக்குமா? (05)



யாழ்.மாவட்டம் சம்பியன் (09)



காதல் என்றால்... (10)



'கடல்' வெளியாகுமுன் மவுசு அதிகரிக்கிறது (11)



உயர உயரப் பறந்தாலும்... (14)

# முற்றுகிறது முரண்பாடு சங்கரி போர்க்கொடி



## எந்நேரமும் பூகம்பம் வெடிக்கலாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உட்கட்சி முரண்பாடுகள் முற்றி கட்சிக்குள் பூகம்பம் வெடிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த முரண்பாட்டின் உச்சக் கட்டமாக கூட்டமைப்பின் மீது அடுக்கடுக்காக காரசாரமான குற்றச்சாட்டுக்களையும், விமர்சனங்களையும் அங்கத்துவக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி முன்வைத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து நேற்று ஆனந்தசங்கரி பகிரங்கமான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கூட்டமைப்பு என்பது பெயரளவில்தான் இயங்குகின்றது. எந்த விடயம் குறித்தும் எம்முடன் அவர்கள் கலந்தாலோசிப்பது இல்லை. அவர்கள் செய்கின்ற தவறுகளுக்காக அவர்களுக்கு சேரவேண்டிய அவப்பெயரை அநாவசியமாக நாம் சுமக்க வேண்டி

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிபதிகள் இன்று கடமைக்கு

(கொழும்பு)

நீதவான்களும் மாவட்ட நீதிபதிகளும் இன்று நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடருவதற்கு தீர்மானித்துள்ளனர். நேற்று நடைபெற்ற இலங்கை நீதித்துறை சேவைகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திகலரட்ன மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இச்சங்கம், சட்ட ஆட்சியின் வீழ்ச்சி மற்றும் நீதித்துறை சுதந்திரம் பற்றிய சில முடிவுகளை எடுத்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## உக்கிரமடைகிறது டெங்கு இருவர் பலி; 28 பேர் பாதிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் 3 நாட்களில் 28 பேர் டெங்கு நோய்க்கு இலக்காகியதுடன், 2 பேர் உயிரிழந்துள்ளதாகவும் யாழ் . போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன் தெரிவித்தார்.

கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இது வரை பதினான்கு பேர் டெங்கு நோயாளர்கள் என இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நுளம்புகளை ஒழிக்கும் புகையூட்டல் நடவடிக்கைகளும், சுகாதாரக் குழுவினரின் வீட்டுத் தரிசனமும் இடம் பெற்றது. நுளம்புகள் பெருகும் வகையில் கழிவுப் பொருட்களை வீட்டில் வைத்திருந்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு இப்பகுதியில் நேற்று நான்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## திவிநெகும சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பெரும் சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டம் நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் இந்த உத்தேச சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திவிநெகும சட்டத்திற்கு எட்டு மாகாண சபைகளும், வடமாகாண சபையின் ஆளுநரும் இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வடமாகாண ஆளுநருக்கு தீர்மானம் எடுக்க முடியுமா என்பது தொடர்பிலான சட்ட விளக்கத்தை நேற்றைய தினம் உச்ச நீதிமன்றம், நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திவிநெகும சட்டம் நிறைவேற்றப்பட்டால் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிபோய் விடும் என சிறுபான்மைக் கட்சி

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகம் செல்ல தடை நீக்கம்

(கொழும்பு)

இலங்கை பிரஜைகளுக்கு தமிழகத்திற்கு செல்ல விதிக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை திரும்பப் பெறுவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் தமிழகத்திற்கு செல்ல இலங்கைப் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர் விடுதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை வைத்தியர் ஓய்வு விடுதி மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்கள் ஓய்வெடுக்கும் அறை யன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும், இச் சம்பவத்துடன் தொடர்புடை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதப் புதையல் அரியாலையில் மீட்பு

அரியாலை மணியம் தோட்டப் பகுதியில் கிணற்றில் இருந்து பழைய ஷெல் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேகர தெரிவித்தார்.

யாழ்.புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நீதின்றின் உத்தரவின் பேரிலேயே இவ்வாயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிணற்றில் குண்டுகள் இருக்கின்ற தகவல் 512ஆவது படைப்பிரிவிற்குத் தெரிவிக்கப்பட்டு பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து குண்டு அகற்றும் பிரிவினரின் உதவியுடன் இவ்வாயுதங்கள் மீட்கப்பட்டன.

கிணற்றிலிருந்து மோட்டார்

19 ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப் போரில் மனித அவலம்; பிரபாகரனின் வரலாற்றுத் தவறு

இலங்கையின் சமாதானத்துக்காக முன்முயற்சி எடுத்த கொடை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு யோசனையை முன்வைத்தன. ஐ.நா. மன்றமும் இதன் பின்னணியில் இருந்தது. அன்றைய நிலைமையில் போரின் முடிவு இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலான வெற்றியாக அமையும் என்பது எல்லோருக்கும் தெரிந்த நிலையில், போரின் முடிவில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படும் பேரழிவை தடுக்கும் வகையில் போரை முறையாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்கிற யோசனையை நாங்கள் முன்வைத்தோம். அந்தத் திட்டத்தின் முழுமையான இறுதி வடிவமும் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஒப்புக்கொண்டபிறகுதான் முடிவுசெய்யப்பட்டிருக்கும். ஆனால் அதற்கு அடிப்படையாக நாங்கள் தெரிவித்த நடைமுறை யோசனை என்னவென்றால், சர்வதேச அமைப்பு, உதாரணமாக அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாடு இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு ஒரு பெரிய கப்பலை அனுப்பிவைப்பது என்றும், அதில் ஐ.நா. மன்ற அதிகாரிகளோ அல்லது ஏனைய சர்வதேச அமைப்பை சேர்ந்தவர்களோ இருந்து, போரின் இறுதியில் எஞ்சியிருந்த அனைத்து விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கணக்கெடுத்து புகைப்படத்துடன் பதிவு செய்வது என்றும் தெரிவித்திருந்தோம். அவர்கள் அனைவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்த பிறகு, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும்



பொட்டு அம்மான் ஆகிய இருவர் தவிர்த்த மற்ற அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அப்படி நடந்திருந்தால், சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சர்வதேச

19 ஆம் பக்கம் பார்க்க

# முறைதவறிய மீன்பிடி நடவடிக்கை கொக்கிளாய் மீனவர்களுக்குப் பாதிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கடல் நீரேரிப் பகுதியில் தொடரும் முறைதவறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தொழில் வளம் பாதிக்கப்படுவதாக இதனை நம்பி வாழும் மீனவக் குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கொக்கிளாய், கருணாட்டுக்கேணி, கொககுத்தொடுவாய் வடக்கு, மத்தி, தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் இதனை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இக்கடல் நீரேரிப் பகுதியில் திருகோணமலை புல்மோட்டைப் பகுதி முஸ்லிம் மீனவர்களும் கொக்கிளாய் முகத்துவாரம் சிங்கள மீனவர்களும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறான இவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் தொழில்வளம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் இவ்விடயம் குறித்து தெரியப்படுத்திய நிலையில் அத்திணைக்களத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னரும் குறித்த மீனவர்கள் வெளியில் வந்த பின்னர் மீண்டும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயனபடுத்துவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இச்செயற்பாட்டை முற்றாகத் தடுப்பதற்கு தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பறிமுதல் செய்து அரசுடமையாக்குவதன். மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (04)

# உதவிப் பொருட்கள் விநியோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு எவ்.ஏ.ஓ. நிறுவனம் உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது.

கடந்த 7,8,9 ஆம் திகதிகளில் இம் மக்களுக்கான உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு குடும்பத்துக்கு 9 மூடை நெல், 40 கிலோ நிலக்கடலை, 10 தென்னங்கன்று வீதம இக்கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகை மக்களுக்கு வழங்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் கிளிநொச்சி காணிக் கந்தோரினால் இவ் உதவிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (04)

# புதிய நிர்வாகம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு கிழக்கு றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 682 ஆவது பிரிவு இராணுவக் கட்டளைத் தளபதி கேணல் லெனிகல, 18 ஆவது படைப்பிரிவு இராணுவ அதிகாரி மேஜர் பொணாண்டோ, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் எஸ்.அமிர்தராஜ், புதுக்குடியிருப்புப் பிரதேச சமூக ஆர்வலர் ஐ.மாதவராசா ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதில் பி.தேவராஜ் தலைவராகவும், த.பேரின்பராஜா செயலாளராகவும் அ.செல்வரட்ணம் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினரகளாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (04)

# திருக்குறள் மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 10 ஆவது திருக்குறள் மாநாடு நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு ஆரமபமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வு காலை, மாலை என இரு வேளைகளும் இடம் பெற்றதுடன் காலை நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன், உள்ளிட்ட துறைசார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் நகர்ப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திருக்குறள் சார்ந்த நிகழ்வுகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரமபமாகி நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (77)

# படக்காட்சியும் கண்காட்சியும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலக்தினால் நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு பட்டிமன்ற படக்காடசியும் எதிர்வரும் 14 ஆம் திகதி சிறுவர்களுக்கான கண்காட்சியும் இடம்பெறவுள்ளதாகப் பிரதம நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)

# சனீஸ்வர பூசை

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு, ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் 13 ஆம் திகதி சனிக்கிழமை புரட்டாதிச் சனி இறுதிநாள் பூசை சிறப்பாக நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு அடியார்கள் எள்ளெண்ணெய் எரிக்கும் விசேட நிகழ்வில் சனீஸ்வர சுவாமிக்கு விசேட அபிஷேக ஆராதனை வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் நவராத்திரி விழா பூசைகள் 24 ஆம் திகதி புதன்கிழமை வரையான 9 நாட்களும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றன. (68)



சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களால் அக்கல்லூரி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியர்களால் ஆசிரியர் கீதம் பாடப்பட்டதுடன். மாணவர்களால் ஆசிரியர்களுக்கு மலர்செண்டு கொடுக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (105)

## ஊர்காவற்றுறை பிரதேசசபை - ஊர்காவற்றுறை

# கூறுவிலை கோரல்

ஊர்காவற்றை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகள் மற்றும் வீதியை சூழவுள்ள பகுதிகளில் உப அலுவலக ரீதியாக கட்டாக் காலிகளை கட்டுப்படுத்தும் சேவைக்கு கூறுவிலைகள் கோரபபடுகின்றன. தரப்படும் மாதிரிக்கமைய பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைகளை கூறுவிலைகளைத் திறக்கும் திகதியான 23.10.2012 முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாக தவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைககுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சித்தியடையும் கூறுவிலையின் சேவைகள் முழுமையாகவோ பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் கூறுவிலைதாரர் சபையின் நிபந்தனைகளை ஏற்று சபையுடன் ஒப்பந்தம் ஒன்றையும் மேற்கொள்ள வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 0213212398 தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

திரு ம.ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

**மாதிரிப் படிவம்**

| சேவை இல | சேவை விபரம் | கூலி |
|---|---|---|
| 01 | மாடுகளை பிடித்து பாதுகாக்கும் இடத்துக்கு கொண்டு வருதல் (தலை ஒன்றுக்கு) | .............................. |
| 02 | ஆடுகளை பிடித்து பாதுகாக்கும் இடத்துக்கு கொண்டு வருதல் (தலை ஒன்றுக்கு) | .............................. |
| 03 | மாடுகளை பாதுகாத்தலும் பராமரித்தலும் (தலை ஒன்றுக்கு - நாளொன்றுக்கு) | .............................. |
| 04 | ஆடுகளை பாதுகாத்தலும் பராமரித்தலும் (தலை ஒன்றுக்கு - நாளொன்றுக்கு) | .............................. |

கூறுவிலைதாரர் பெயர் :-..............................

முகவரி :-..............................

.............................................
கூறுவிலைதாரர் ஒப்பம்

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..............................

(C/2043)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் பார்வையாளர்கள் எனும் போர்வையில் மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்களைத் திருடியவர்கள் நால்வர் வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மது அருந்திய நிலையில் ஆட்டோ ஒன்றில் வந்திருந்த இந்த நான்கு பேரும் வைத்தியசாலையில், ஒருவரைப் பார்ப்பதற்காக வந்திருப்பதாகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித்து உள்ளே செல்ல முயற்சித்திருக்கின்றனர்.

இருந்தும், அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிவித்தனர். அவர்களும் சம்பவ இடத்திற்கு வந்த போது அவர்கள் நால்வரும் ஆட்டோவில் ஏறிச்சென்றுவிட்டனர். இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக வந்த அவர்கள் அங்கேயுள்ள வைத்தியசாலையின் நுழைவாயிலின் ஊடாக வைத்தியசாலை ஊழியர் ஒருவர் செல்வதை அவதானித்து அவருக்குப் பின்னால் சென்று வைத்தியசாலை வளாகத்திற்குள் சென்றிருக்கின்றனர்.

அதன் பின்னர் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் இருந்து நான்கு தலைக் கவசங்களை எடுத்து ஆட்டோவிற்குள் மறைத்து வைத்திருக்கின்றனர். அந்த நேரம் இதனைப் பார்த்துக்கொண்டிருந்த வைத்தியர் ஒருவர் அவர்களிடம் இருந்த தலைக்கவசங்களைப் பறிப்பதறகு முற்பட்டபோது அவர்கள் ஆட்டோவுடன் வைத்தியசாலை வளாகத்தில் இருந்து தப்பியோட முயற்சித்தனர்.

உடனடியாக சுதாகரித்துக் கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாயில் கதைவைப் பூட்டி அவர்கள் தப்பிக்காதபடி செய்து அவர்கள் நால்வரையும் பிடித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காக 11.10.2012 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் ஊரெழு, கரந்தன் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது

# ஆங்கில நாடகப் போட்டியில் வென்றவர்களுக்கு பதக்கம்



வட மாகாண மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். வடமாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வு நடைபெற்றது.

வட மாகாண மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டிகள கடந்த 28, 30 மற்றும் 01 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வுகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுள்ள 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த 2000 வரையிலான மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாண பதில் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) மு.இராதாகிருஷ்ணன், வட. மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ,மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# குற்றச் செயல்களைத் தடுக்க விடா முயற்சியில் பொலிஸார்

## – யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல் –

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு இதுவரை 32 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நடைபெற்றிருப்பது பதிவாகியுள்ளது என யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள குற்றச் செயல்கள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்றிருக்கும் இந்தச் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் 27 சம்பவங்களில் 16 வயதுக்கும் குறைவான சிறுவர்களே பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

21 சம்பவங்கள் காதல். சம்பந்தமாக இடம்பெற்றுள்ளதாகவும், இதில் மூன்று சம்பவங்கள் நெருங்கிய உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டவை எனவும் பிரிதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்தப்புள்ளி விபரங்களை 2011 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கின்ற போது மூன்று பாலியல் சம்பவங்களே 2011 ஆம் ஆண்டு அதிகமாக இடம் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக்காலப்பகுதியில் இடம்பெற்ற ஏனைய குற்றச் செயல்கள் குறித்து தகவல் தெரிவித்த அவர், 2011 ஆம் ஆண்டு 21 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும், 2012 ஆம் ஆண்டில் இதுவரை அத்தகைய 19 சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் கடந்த 2011 ஆம் ஆண்டும் 2012 ஆம் ஆண்டில் இதுவரையும் இடம் பெற்ற பாரிய குற்றச்செயல்கள் குறித்தும் தரவுகளை இதன் போது பிரதிப்பொலிஸ் மா அதிபர் சமர்ப்பித்தார். மேலும் யாழ்.குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகள் பதிவு செய்ய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரிலேயே இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா,இ)

# பெண்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

யூர்.பிறண்ட் பௌண்டேசன் நிறுவனம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவாகார அமைச்சு இணைந்து பெண் பிள்ளைகள் அனைவரது சார்பாக சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடவுள்ளது.

இத்தின நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# மானிப்பாய் இந்து மாணவர்களுக்கு தனிநடிப்புக்கான வேத்தியல் விருது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியினால் நடத்தப்பட்ட தனி நடிப்பு, வினாவிடைப் போட்டியில் தேசிய ரீதியில் வெற்றி பெற்று வேத்தியல் விருது பெற்றுள்ளனர்.

அகில இலங்கைப்பாடசாலைகளுக்கிடையே மாணவர்களது நடிப்பு, நாடக அறிவினை வளர்க்கும் முகமாக நடத்தப்பட்ட போட்டிகளிலேயே மேற்படி விருதினைப் பெற்றுள்ளனர்.

தனிநடிப்பு போட்டியில் குணரத்தினம் திலக்ஸன், வினாவிடைப்போட்டியில் கு.லோன்ஸன் தேசிய ரீதியில் வெற்றி பெற்றுள்ளனர்.

திலக்ஸன் மாவட்டப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக கொண்டதுடன், தேசியத்தில் 3 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார். அதேவேளை லோன்ஸன் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் 7 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தேசிய ரீதியிலான சாதனைகளில் அங்கமாக இம்மாணவர்களது வெற்றியும் விளங்குகின்றது.

இவ்வெற்றி மூலம் பாடசாலைக்கு மட்டுமல்லாது வலயம், மாவட்டம், மாகாணம் என்பவற்றிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இம்மாணவர்களுக்கான வழிப்படுத்தலினை நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார்.

# மானிப்பாய் இந்துவின் அதிபர் பிரதீபா பிரபா விருது பெற்றார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் உள்வாங்கப்பட்டுள்ளார். அத்துடன் வலிகாமம் கல்வி வலயத்தின் சிறந்த அதிபராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் பிரதீபா பிரபா விருதினையும் பெற்றுள்ளார்.

இவர் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக்கல்லூரி என்பவற்றின் பழைய மாணவன் என்பதுடன், தனது நிர்வாகத்திறன் காரணமாக சிறிய பாடசாலையாக இருந்த ராஜா பாடசாலையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக தரமுயர்த்தியதோடு பௌதிகரீதியான வளங்களினை ஏற்படுத்தி கல்வியுடன் இணைப்பாட விதான செயற்பாட்டிலும் முதன்மையான பாடசாலையாக உருவாக்கியிருந்தார். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணி பல பாடசாலைகளுக்கு சவாலான அணியாக இன்றும் விளங்குகின்றது. இச்செயற்பாட்டிற்கு இவரது செயற்பாடு அடிப்படையானது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியினை பொறுப்பேற்ற இவர் தனது வழிநடத்தலில் கல்வியில் உயர்நிலையினை நோக்கி கொண்டு செல்வதுடன், உதைபந்தாட்டத்தில் தேசியரீதியிலான வெற்றி என்பதினை கனவாக்கியதுடன் வலிகாமம் வலயத்திலேயே முதன் தேசிய பாடசாலை எனும் பெருமையினைபெற்றுக் கொடுத்துள்ளார்.

மாணவர்களை அனைத்துத் துறைகளிலும் தேசிய மட்டத்தில் சாதிக்க வைக்க வேண்டும் எனும் இவரது எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் செயற்பாடாக மாணவர்கள் விளையாட்டுடன் கலைத்துறை மற்றும் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

# தகவல் தொழில் நுட்பம் வினாவிடைப் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்ப வினாவிடைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு,

சங்கானைக் கோட்டம்

பிரிவு 01

ரி.பரதன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.கஜாநாதி (யா/யாழ்ப்பாணக்கல்லூரி), இருவர் மூன்றாம் இடம் - ஆர்.பிரணவன் (யா/சரஸ்வதி வித்தியாலயம்), ஆர்.ரூபலக்ஷ்மன் (யா/சரஸ்வதி வித்தியாலயம்)

பிரிவு 02

பி.பிரசாந்த் (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), ஜெ.மனோஜ் (யா/யாழ்ப்பாணக்கல்லூரி), கே.அபிராமி (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

பிரிவு 03

பி.சுந்தர நடராஜன் (யா/வட்டு இந்துக் கல்லூரி), பி.லக்ஷிகா (யா/வட்டு இந்துக் கல்லூரி), கே.தனன்சியன் (யா/யாழ்ப்பாணக்கல்லூரி)

(தொடரும்...)

# தீவக விவசாயச் செய்கை; அதிகாரிகள் குழு பார்வை

(வேலணை)

விவசாய அமைச்சினைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் கடந்த சனிக்கிழமை தீவகப் பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கு விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

வேலணை விவசாயப் போதனாசிரியர் செ.இராமநாதன் தீவகத்துக்கு வருகைதந்த இந்த உயர் அதிகாரி குழுவினரை வரவேற்று உபசாரித்ததுடன் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மேற்கொளள்ளப்பட்டிருக்கின்ற மரமுந்திரிகை மற்றும் தூவல் நீர்ப்பாசன முறையிலான வெங்காயப்பயிர்ச் செய்கை போன்ற பல விதமான விவசாய அபிவிருத்தித் திட்டச் செய்கைகளையும் குழுவினர் பார்வையிட்டனர்.

யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் இந்த உயர் அதிகாரிகள் குழுவினருடன் சென்றார். (05)



வல்வெட்டித்துறை நகரசபைக்குச் சொந்தமான குப்பைகளை ஏற்றும் உழவு இயந்திரம் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு அண்மித்த கடற்கரையோரப்பகுதியில் குப்பைகளை கொட்டும் சமயம் மண்ணுக்குள் புதைந்து சரிந்து நிற்பதனைக் காணலாம். (116)

*மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.* - சாணக்கியர்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நச்சுச் சுழலிலிருந்து மீள்வோம்!

நம்மிடம் எந்தத் தவறுகளும் இருந்ததில்லை; எல்லாத் தவறுகளும் மற்றவர்களினுடையதே என்ற வாய்பாட்டை நாமே சொல்லி நாமே நம்பி, இதோ சர்வதேசமும் ஏற்றுக்கொண்டுவிடப் போகிறது என்ற பாமரத்தன எண்ணத்திலேயே இப்போதும் இருக்கிறோம்.

நம்மைச் சுயவிமர்சனம் செய்துகொண்டு, நம்மைத் திருத்திக்கொண்டு, நம் தேவையிலுள்ள நியாயத்தைச் சொல்லும் போதுதான் மற்றவர்களுக்கும் அது நியாயமாக விளங்கும் என்ற எளிய உண்மையை நாமின்னும் புரிந்துகொள்வதாயில்லை.

எதிர்த்தரப்பின் குற்றமே பெரிதென்று பார்க்கப்படுவதால், நாம் குற்றமற்றவர்கள் என்று ஆகிவிட முடியாது. இந்த நாட்டில் பேரினவாதக் கருத்தியல் உருவாக்கிய அழிவுகளுக்குச் சமாந்தரமாக தமிழ்த் தேசியத்தின் பொங்குதலும் பெரும் உயிரழிவுகளை நோக்கிப் பாய்ந்ததை நாம் எப்படி மறுக்க முடியும்?

நம்மைத் தனிப்பெருமை கொண்டவர்களாகவும், மற்றவை யாவற்றையும் எதிரிகளாகவும், நமது நலனுக்கு குந்தகமாக இருப்பார்கள் என்று கருதும் அனைவரையும் கொன்றுகுவிப்பதே நம் மக்களைக் காப்பாற்றுவதற்கான தியாகப் பண்பாகவும், மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வது பற்றிய எண்ணமே தோன்ற விடாமல் மறுப்பதும், எதிரிகளை உருவாக்கிப் பெருப்பித்தபடி இருப்பதும் தேசபக்தி என்ற பெயரில் உருவாகக்கூடிய பாசிசம் என்பதை இன்று நாமறிவோம்.

நம்மை மேன்மையானவர்களாகவும், எல்லோரையும் விட அதிக துயரங்களைச் சுமப்பவர்களாகவும் கற்பித்துக் கொள்ளும் தேசியமும் தேசபக்தியும் நம் ஆசைகளின் பூர்த்திக்காக மற்றவர்களுக்கு ஊறு செய்வதை நியாயப்படுத்துகிறது. மொழி, இனம், மதம், கலாசாரம் என்று எத்தனை எத்தனை விதங்களில் வேறுபட்டிருந்தாலும் பகுத்தறிவு மனிதர்களாக நாம் இணைந்து வாழ முடியும் என்ற சாத்தியத்தை மறுத்து நம்மைக் குரூரமானவர்களாக்கி விடுகிறது.

நம்முடைய தேச நலனுக்காக, நமது மக்களின் நல்வாழ்வுக்காக என நாம் செய்த கொலைகளும், உயிர்களைப் பறிகொடுத்த குடும்பங்களின் அடிவயிற்றுக் கதறல்களும் நம் மனசாட்சியைத் தொட்டு உறுத்திவிடாதிருக்க தேசிய மற்றும் விடுதலைப் போர்வையை அதன்மீது போர்த்திருந்தோம். அவை நம் நீதி நியாய உணர்வுகளைச் சீண்டிவிடாதிருப்பதற்காக, நாம் அடைந்த பெருந்துன்பங்களையும் நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கவசமாகப் பிடித்துக் கொண்டிருந்தோம்.

மிகப்பெரிய துயர் நமக்கு இழைக்கப்படுகிறது என்பதைப் பெருங்குரலெடுத்து அரற்றியபடியே, நம் பெயரால் – தமிழ் தேசத்தின் பெயரால் செய்யப்பட்ட படுகொலைகளையும், மற்றவர்க்கு நாம் இழைத்த துயர்களையும் அங்கீகரித்தபடியுமிருந்தோம்.

நமது சமூகத்தின் தோல்வியும், அறக் குலைவும் – ஆயுத மேந்தாதவர்களையும் பொதுமக்களையும் படுகொலை செய்து மானபங்கப்படுத்த நாம் தொடங்கிய போதே தொடங்கிவிட்டது.

எதிரிகளையும் துரோகிகளையும் அதிகரித்தபடியும் அழித்தபடியுமிருந்தோம். மற்றவர்களின் குற்றங்களையும் குறைகளையுமே பார்த்தபடியிருந்ததில், நம் சமூகத்தின் நியாயவுணர்வை இழந்து துயர்களுடன் கூடிய கொடூரர்களாகிப் போனோம் என்பதே உண்மையானது.

இன்று நாம் மீண்டும் உயிர்த்தாக வேண்டும். இவ்வளவு இழப்புகளைக் கண்டபிறகு, மானுடப் பண்புகளை மேவி பழி தீர்க்கும் உணர்ச்சியே மிகும் என்கிற மேம்போக்கு ஆவேச நெருப்பில் வீழ்ந்துவிடலாகாது.

பழிதீர்த்தலும் பகையும் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பையும் வாழவைப்பதில்லை; வலிகளும் வாதைகளும் எல்லோர்க்குமாய்த் தொடர்வதையே அது ஊக்குவிக்கும். இந்த நச்சுச் சுழலிலிருந்து நாம் மீண்டாக வேண்டும்.

- ஆசிரியர்

# வாக்காளர்கள் மேன்முறையீட்டை மாத இறுதிவரை சமர்ப்பிக்கலாம்

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் பெயர்ப்பட்டியல் தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை வாக்காளர்கள் தமது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, வாக்காளர் பெயர்ப்பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் 2012ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் காணப்படுவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

வாக்காளர்களின் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படாதவிடத்து மாவட்ட தேர்தல்கள் செயலகத்திற்கு அது தொடர்பில் தெரியப்படுத்த முடியுமென அவர் சுட்டிக்காட்டினார்.

2012ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் வாக்காளர்கள் தமது பெயர்களை இணைத்துக் கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

# தேசிய பொலிஸ்துறை ஆணைக்குழுவின் அதிகாரத்தை அதிகரிப்பதற்குத் திட்டம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்காக ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பொலிஸ்துறை ஆணைக்குழுவின் உறுப்பினர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி, நிதியமைச்சின் பிரதிநிதி, ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் கே.பி. தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

17 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்தில் முழு அதிகாரங்களைக் கொண்டதாக பொலிஸ் துறை ஆணைக்குழு காணப்பட்டது.

பொலிஸாருக்கு இடமாற்றங்களை வழங்குவது உள்ளிட்ட அதிகாரங்களை ஆணைக்குழு கொண்டிருந்தது.

எனினும் 18ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் மூலம் அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டதுடன், பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் அதிகாரம் மாத்திரமே ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

ஆனால் முறைப்பாடுகளை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் கூட தற்போது, பொலிஸ்துறை ஆணைக்குழுவிற்கு இல்லை. இது குறித்து தெளிவுபடுத்தி, ஆணைக்குழுவிற்கு கூடுதல் அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக கடந்த 2 ஆம் திகதி, ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனையடுத்தே மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு இரண்டு மாதங்களில் தனது யோசனைகளையும் பரிந்துரைகளையும் ஜனாதிபதியிடம் கையளிக்கும் எனவும் தென்னக்கோன் கூறியுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புள்ளியிடுவதை நிறுத்துங்கள்

## ஆசிரியர்சங்கங்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களுக்கு புள்ளியிடுவதை பரீட்சைத் திணைக்களம் உடனடியாக நிறுத்த வேண்டுமென ஆசிரியர் சங்கங்கள் பரீட்சைத் திணைக்களத்திடம் வலியுறுத்தி உள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிடும் வரை மேற்கொண்டு எதுவும் செய்ய வேண்டாமென அவை வலியுறுத்துகின்றன.

இளைப்பாறிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் புள்ளியிடு தலை மேற்பார்வை செய்ய பொருத்தமில்லாதவர்கள் என இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலையைத் தொடர வேண்டாமெனக் கேட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் எழுதியிருந்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

சரியான தரங்களுக்கு அமையாத வகையில் புள்ளியிடும் வேலைகள் நடப்பதாக அவர் கூறினார்.

புள்ளியிடும் நிலையமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கொழும்பு கோதமி வித்தியாலயத்தின் 6ஆம், 7ஆம் தர மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

புள்ளியிடும் வேலை நடை பெறும் பாடசாலைகளை முழுமையாக மூடிவிடுவதே வழக்கம். இது குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் என ஸ்ராலின் கூறினார்.

பெறுபேறுகள் தவறாக காணப்படுமாயின் கல்வியமைச்சு பொறுப்பேற்கப்போவதில்லை என அவர் கூறினார்.

இந்த விதமாக புள்ளியிடல் நடந்தால் மேலும் குழப்பங்களும் பிரச்சினைகளும் உருவாகும் என இலங்கை ஆசிரியர் சேவைச்சங்க செயலாளர் மகிந்த ஜயசிங்க கூறினார்.

# மொழிப்பிரச்சினைக்கு தீர்வுகாண தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

மொழிப் பிரச்சினைக்கு தீர்வினை வழங்குவதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளச் செல்லும்போது எதிர்நோக்க நேரிடும் மொழிப் பிரச்சினை தொடர்பில் இந்தத் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

1956 என்ற உத்தேச தொலைபேசி இலக்கம் இன்னும் சில வாரங்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஏற்கனவே, சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்ட அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் வீதம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமது சேவைப் பிரிவிற்கு பிரச்சினைகள் தொடர்பில் அறியக் கிடைத்தவுடன் குறித்த உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு, தெரியப்படுத்தவுள்ளதாக அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த நிறுவனங்களிலுள்ள மொழிப் பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள் மூலம் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளார்.

**சுரேஷின் EPRLF மக்கள் மத்தியில் பலமுள்ளதாக இருந்திருந்தால் சுரேஷ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவுசெய்யப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்திருப்பாரா? இல்லை. உண்மை என்னவென்றால், சுமந்திரனின் வருகையின் பின்னர் சுரேஷ் ஓரங்கட்டப்பட்டு வந்திருக்கிறார். வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்திக்கும் போது சம்பந்தன், சுமந்திரனையே அழைத்து சென்றிருக்கிறார். கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமான பேச்சாளராக சுரேஷ் இருந்தும் ஊடகங்களுக்கு குறிப்பாக ஆங்கில ஊடகங்களிற்கு சுமந்திரனே பேட்டிகளை வழங்கி வந்துள்ளார். "நாங்கள் ஆயுதம் தூக்காதவர்கள்" என்று சம்பந்தன் கூறியதன் மூலம் சுரேஷ் ஆயுதம் தூக்கியவர், கொலைகள் கடத்தல்களில் ஈடுபட்டவர் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டமை போன்றன சுரேஷை ஓரங்கட்டுவதற்கான முயற்சியே.**

- பொன்.வாதவூரன்

# சுரேஷின் ஜம்பம் சம்பந்தனிடம் பலிக்குமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானதுவிடுதலைப் புலி களின் ஆசீர்வாதத்துடன் 2001 ஆம் ஆண்டு பரிணாமம் பெற்றது. அதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஆயுதம் தாங்கிய இயக்கங்களும், பிற கட்சிகளும் தனித் தனியே தேர்தலில் போட்டியிட்டு திரும்பத் திரும்ப மக்களால் நிராகரிக்கப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இயக்கங்கள் தமக்கு எதிராக வெளிப்படையாகச் செயற்பட்டதோ அல்லது சம்பந்தன் போன்றவர்கள் மறைமுகமாக செயற்பட்டதோ "காற்றுப்புக முடியாத இடங்களுக்குள்" எல்லாம் புகுந்து விளையாடிய விடுதலைப்புலிகளுக்கு தெரியாத ஒரு விடயமல்ல.

வெளிநாட்டு தூதரகங்கள் நடாத்தும் விருந்துபசாரங்களில், வெளிநாட்டு குடிவகைகள் உள்ளே சென்றதும் கொஞ்சம் கொஞ்சமாக உள்நாட்டு விடயங்கள் பரிமாறப்படும். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் கூட்டமைப்புத் தலைவர் ஒருவர் "புலிகளை அழிக்காமல் ஒன்றும் செய்யமுடியாது" என்று கூறியதும் விடுதலைப்புலிகளுக்கு தெரிந்துதான் இருந்தது. அது மட்டுமல்ல வெளிநாட்டுத் தலைவர்களை, உயர் அதிகாரிகளை சந்திக்கும் போதும் என்னென்ன கதைத்தார்கள் என்பது புலிகளுக்கு நன்கு தெரிந்திருந்தது. இவ்வளவும் தெரிந்திருந்தும், காய் நகர்த்தலில் வல்லவர்களான விடுதலைப்புலிகள் இவர்கள் எல்லோரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூடாரத்திற்குள் கட்டிப்போட்டதென்பது காரணம் இல்லாமலில்லை.

EPDP யானது தீவுப்பகுதியில் தனது காலைப் பதிப்பதில் ஆரம்பித்து ஏனைய பகுதிகளிற்கும் தமது பிரசன்னத்தை விஸ்தரித்துக் கொண்டிருந்தது. ஏனைய இயக்கங்கள் போன்று இவர்களும் மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாது அந்நியப்பட்டுவிடுவார்கள் என்றே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. சோறா? சுதந்திரமா? என்ற கோஷம் முன்வைக்கப்பட்டிருந்த நேரத்தில், EPDP யானது தமிழ் மக்களின், குறிப்பாக தீவுப்பகுதி மக்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டதுடன் வெற்றியும் கண்டது. தமிழ்த் தலைமைகளினால் சோறும் கிடைக்காமல் சுதந்திரமும் கிடைக்காமல் அலைந்த மக்களுக்கு சோற்றுத்தேவை உட்பட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி



செய்தமையானது மக்களின் ஆதரவை EPDP யின் பக்கம் திருப்பியது.

இராணுவ ரீதியில் பலம் பொருந்தியவர்களாக இருந்த விடுதலைப்புலிகள் இந்த நிலை நீடித்தால், அரசியல் ரீதியாக ஆபத்தில் முடியும் என்பதை முன்பே உணர்ந்தார்கள். இதனால்தான் தங்களது உறுப்பினர்களைக் கொன்ற இயக்கத்தவர்களையும், தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆரம்பித்தார்கள். அவர்கள் கடந்த காலங்களில் மாபெரும் தவறுகளை விட்டிருந்தாலும், EPDP யின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட விடயத்தில் மிகவும் தொலைநோக்குடன்தான் செயற்பட்டிருக்கிறார்கள்.

ஐந்து கட்சிகளை கொண்ட கூட்டமைப்பை உருவாக்கி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எவராலும் தாக்குப்பிடிக்க முடியாதளவு பிரசாரத்தை மேற்கொண்டு, எத்தனையோ பழிகளை EPDP மீது போட்டு அதன் முக்கிய உறுப்பினர்கள் பலரை அழித்தும் EPDP யானது 94 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருவதுடன் கடந்த பொதுத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்கை டக்ளஸ் பெற்றிருக்கிறார். இத்தனைக்கும் "உனது சகோதரனையும் சகோதரியையும் நிர்வாணமாகக் கொன்றவர்கள்" என்ற உணர்ச்சியை தூண்டும் பிரசாரங்கள் அரசிற்கெதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த வேளை அரசாங்கத்தின் பங்காளியாக டக்ளஸ் இருந்து வருகின்றார். விடுதலைப்புலிகள் மதிநுட்பத்துடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கியிருக்காமல் விட்டிருந்தால்... நிலைமை எங்கேயோ போய் முடிந்திருக்கும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சுரேஷ் என்றால் என்ன, செல்வம் என்றால் என்ன, சம்பந்தன் என்றால் என்ன இவர்கள் அனைவரினதும் தலைவர்கள் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டவர்கள்தான். இவ்வாறிருந்தும் தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்குள் தம்மை இணைத்துக்கொண்டதற்கான காரணம் கடந்த காலங்களை மறப்போம், மன்னிப்போம், உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற உயர்ந்த நோக்குடன் அல்ல, தமிழ் மக்களின் மேல் உள்ள பாசத்தினால் அல்ல. மக்கள் செல்வாக்கு இல்லாவிடினும் புலிகள் இவர்களை வெல்ல வைத்து நாடாளுமன்றம் அனுப்புவார்கள் என்ற அவாவினால்தான். இவ்வாறு சுயலாப நோக்குடன் இணைந்து கொண்டவர்களுக்குள் நான் பெரிதா? நீ பெரிதா? நானா நீயா ஆங்கிலம் நல்லா கதைப்பது? நானா நீயா கூடப் படிச்சது? நானா நீயா துவக்குப் பிடிச்சது? நானா நீயா மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தது? நானா நீயா புலிகள் போலே நடித்துக்கொண்டு புலிகளை காட்டிக்கொடுத்தது? என்ற புகைச்சல் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. அதன் வெளிப்பாடுதான் அண்மையில் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சம்பந்தனுக்கெதிரான குற்றச்சாட்டு.

சுரேஷ் பிரேமச்சந்திரன், தான் பல முறை கோரியிருந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யாமல் சம்பந்தன் இழுத்தடிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார். பதிவு செய்யப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் இதுதான் உண்மையான காரணமா? சுரேஷின் EPRLF மக்கள் மத்தியில் பலமுள்ளதாக இருந்திருந்தால் சுரேஷ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவுசெய்யப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்திருப்பாரா? இல்லை. உண்மை என்னவென்றால், சுமந்திரனின் வருகையின் பின்னர் சுரேஷ் ஓரங்கட்டப்பட்டு வந்திருக்கிறார். வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்திக்கும் போது சம்பந்தன், சுமந்திரனையே அழைத்து சென்றிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமான பேச்சாளராக சுரேஷ் இருந்தும் ஊடகங்களுக்கு குறிப்பாக ஆங்கில ஊடகங்களிற்கு சுமந்திரனே பேட்டிகளை வழங்கி வந்துள்ளார். "நாங்கள் ஆயுதம் தூக்காதவர்கள்" என்று சம்பந்தன் கூறியதன் மூலம் சுரேஷ் ஆயுதம் தூக்கியவர், கொலைகள் கடத்தல்களில் ஈடுபட்டவர் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டமை போன்றன சுரேஷை ஓரங்கட்டுவதற்கான முயற்சியே.

இயற்கையாகவே இறுமாப்புக் குணாம்சத்தைக்கொண்ட சம்பந்தன் புலிகளின் காலத்தில் தமிழ்ச்செல்வன் போன்றவர்க்ளுக்கெல்லாம் சலாம் போட்டிருக்கிறார். புலிகள் ஆயுதங்களுடன் உலா வந்த நேரத்தில் கொஞ்சிக்குலாவி அவர்களுடன் திரிந்தவர்தான் சம்பந்தன். அந்த நேரத்தில் தாங்கள் ஆயுதம் தூக்காத மகான்கள் என்றெல்லாம் கூறவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளிப்படையாகத் தனக்கெதிராகக் கிளர்ந்தெழுவார் என்பது சம்பந்தன் எதிர்பார்க்காத ஒன்றுதான். அரசியல் களங்கள் பலவற்றைக் கண்ட சம்பந்தனுக்குக் சுரேஷ் ஒரு ஜுஜுபி. சுரேஷின் உத்தரவின் பேரில் புலி உறுப்பினர்களைக் கொன்றது, கட்டாய ஆட்சேர்ப்பு, மண்டையன் குழு போன்றவற்றை வைத்தே சுரேஷை இலகுவாக அம்பலப்படுத்திவிடலாம் என சம்பந்தன் எண்ணக்கூடும்.

அதே நேரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டமொன்றில் சரவணபவன் ஒரு சிறு விடயத்தில் முரண்பட்ட போது "நாங்கள் இஞ்ச யாவாரம் செய்து சனத்தின்ர பணத்தை சுருட்டிப் போட்டு அரசியல் செய்யேல்ல" என்று சற்றுக் காட்டமாகச் சொன்னதும், சரவணபவன் வாலைச் சுருட்டிக்கொண்டு இருந்தது போல சுரேஷ் இருக்கப்போவதில்லை. சம்பந்தனின் குணாம்சம் தெரிந்திருந்தும் எதுவித பின்னணியும் இல்லாமல் சுரேஷ் கோதாவில் இறங்கியிருக்க முடியாது. புலம் பெயர் தமிழர்களைப் பொறுத்த மட்டில் கணிசமானவர்கள் சுரேஷின் பக்கம் நிற்கிறார்கள். உள்ளூர் பத்திரிகைகள் சில சுரேஷின் அறிக்கையை இருட்டடிப்பு செய்திருந்த போதிலும் புலிகளின் உத்தியோகபூர்வமான பத்திரிகைகள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தமை இதற்குச் சான்றாகும்.

சம்பந்தன் போன்றவர்களிடம் கல்வியறிவு, பேச்சாற்றல், பணபலம் போன்றன இருந்தும் காலம் காலமாக தமிழ் மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கியிருந்தும் இந்த தலைமை தமிழ் மக்களுக்கு கண்ணீர், கம்பலை, உயிரிழப்பு, பொருளிழப்பு, இடப்பெயர்வு போன்றவற்றைத்தவிர எதைத்தான் பெற்றுக்கொடுத்திருக்கிறது? முருக்கு பருத்தும் தூணுக்கு உதவாததுபோல் இவர்கள் பலம் பெற்றாலும் மக்கள் எவரும் பயனடையப்போவதில்லை. இதுதான் சம்பந்தன் போன்றவர்கள் பற்றி தமிழ் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள கருத்தாகும். இதை உறுதி செய்வது போலவே இவர்களது நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

என்னதான் இருப்பினும் சுரேஷ் சம்பந்தனை ஒரு உலுப்பு உலுப்பித்தான் போட்டார். ஆனால் அவர் இப்போதைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறப் போவதில்லை. வெளியேறினால் நடு ரோட்டில்தான் நிற்க வேண்டி வரும் என்பது சுரேஷிற்கு நன்றாகத் தெரியும். இவர்கள் எல்லாம் தங்கள் தங்களது கட்சிப் பலத்தில் நிற்பவர்கள் அல்ல. கருணாநிதியின் பாஷையில் சொல்வதானால் ஸ்டான் டில்லாத பைசிக்கிள்கள். மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தம்மை நடத்துவதாகக்கூறிக்கொண்டாலும் அவர்களின் காலில் விழுந்தாவது தேர்தலில் வென்றுவிட வேண்டும் என எண்ணும் மானஸ்தர்கள்.

என்னதான் இருப்பினும் சுரேஷின் ஜம்பம் சம்பந்தனிடம் பலிக்கப் போவதில்லை. அவர் சேரக்கூடாதவர்களிடம் எல்லாம் பின்கதவால் சேர்ந்து ஓரங்கட்டத் தயங்கப் போவதில்லை. ●

# வேலை நிறுத்தம் தொடர்பில் இன்று முக்கிய தீர்மானம்

## பல்கலை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு, அரசாங்கத்தின் முன்மொழிவுகளை ஆராய்ந்து இன்றையதினம் வேலைநிறுத்தம் தொடர்பில் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்குமெனக் கூறியுள்ளது.

இன்னும் இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. நடைபெறும் பேச்சுவார்த்தையில் திருப்தியான முடிவு கிடைக்குமாயின் மட்டுமே நாம் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவோம் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவரை நாம் பின்வாங்கப்போவதில்லை. இருப்பினும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தில் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதத்தை கல்விக்குச் செலவழித்தல் என்பதில் விட்டுக் கொடுப்பை செய்ய பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் விரும்புகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதத்தை அரசாங்கத்தால் கல்விக்கு செலவளிக்க முடியாது என்பதை அரசாங்கம் தெளிவுப்படுத்தியுள்ளது. ஆனால் சங்கம் கணிசமான அதிகரிப்பை எதிர்பார்க்கின்றது.

நாம் எமது கொள்கையை கைவிடவில்லை. கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை செலவழிப்பதற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எமது கோரிக்கைகள் பலவற்றுக்காக சாதகமாக பதிலளித்தார். இருப்பினும் இன்னும் எழுத்து வடிவ ஒப்பந்தம் ஏற்படவில்லை.


கடந்த 3 மாத சம்பளத்துக்கான சம்பள நிலுவை வழங்கவும் ராஜபக்ஷ சம்மதித்துள்ளார். பல பாதகமான சுற்றறிக்கைகளை மீளப்பெற்றுக்கொள்ளல், சில விரிவுரையாளர்கள் மீது பழிவாங்கல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தல், கொள்கை ரீதியான வேறு தீர்மானங்கள் போன்ற விடயங்களுக்கு தீர்வுக்காண அமைச்சர் பசில் ராஜபக்ஷ சம்மதித்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமது சம்பளப் பிரச்சினை தொடர்பாக பேசுவதற்காக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவை நேற்றுமுன்தினம் சந்தித்தது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் சகோதர சங்கங்கள் கூடவுள்ள நிலையில், சங்கத்தின் நிறைவேற்றுக்குழு இன்று இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளது.

# திலகரட்னவிற்கு நீதி கிடைக்க நீதித்துறை இணைய வேண்டும்

## அழைப்பு விடுக்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

இனங்காணப்படாத குழுவினால் தாக்கப்பட்ட நீதிச்சேவை ஆணைக குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரடனவுக்கு நீதி கிடைப்பதற்கு நீதித்துறையின் சகல பங்குதாரர்களும் முழு அளவில் தமது வலுவை வெளிப்படுத்த வேண்டும் என மக்கள விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் மன்னார் நீதவான் தாக்கப்பட்ட சம்பவம் தொடரபில் நீதித்துறையினர் போதியளவில் செயற்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டின் போது அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அரசியல் புலன்களுக்கேற்ப நீதித்துறையை ஆடடிப்படைக்க முயற்சிகள் நடந்தன. இவ்வாறான தலையீடுகளுக்கு எதிராக ஓர் ஊடக அறிக்கையை விடுக்குமாறு திலகரடன கட்டாயப்படுத்தப்பட்டார். இன்று அவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என விஜித்த ஹேரத் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து சட்டதரணிகளும் நீதிபதிகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னரும் இலங்கை மருத்துவக் கவுன்ஸிலின் பதிவாளர் நோனிஸ் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சமமேளன்த்தின் உத்தியோகதர்கள்மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என அவர் கூறினார்.

அரசாங்கத்தின் கையாட்கள் இதை வெளிநாட்டுச் சதி என கூறுகின்றனர். திலகரடன எந்தவொரு சர்வதேச சக்தியாலும் தாக்கப்படவில்லை. அரசாங்கத்துடன் தொடர்புடையவர்களே இதைச் செய்ததாக எடுக்க முடியும்.

மக்கள் எதிர் நடவடிக்கைகளுக்காக முன்வரவேண்டும் இனியும எதையும் பொறுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# திடீர் முற்றுகை மூலம் 21 இலட்சம் தண்டம்



(கொழும்பு)

கடந்த ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான ஒன்பது மாதக் காலப்பகுதியில் அளவைகள் நிறுவைகள் திணைக்களம் 6644 திடீர் முற்றுகைகளை நடத்தியுள்ளது.

இந்த திடீர் முற்றுகைகளின் மூலம் 21 இலட்சத்து 98ஆயிரம் ரூபா அபராதத் தொகையாக அறவிடப்பட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் பணிப்பாளர் கே.பரேமசிறி குமார தெரிவித்தார்.

கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் பணிப்புரையின் பேரில் நாடு முழுவதிலும் இந்த திடீர் முற்றுகைகள் நடத்தப்பட்டன.

போலி அளவை நிறுவை உபகரணங்களைப் பாவிக்கும், முத்திரை பதிக்கப்படாத உபகரணங்களைப் பாவிக்கும், சட்ட விரோதமான முறையில் அளவை நிறுவை உபகரணங்களை பாவிக்கும் வர்த்தகர்களுக்கெதிராக இந்த முற்றுகைகளை நடத்துமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிணங்கவே இந்த திடீர் முற்றுகைகள் நடத்தப்பட்டதாகவும் இதன் மூலம் முத்திரை பதிக்கப்படாத அளவை நிறுவை உபகரணங்களைப் பாவித்தல் தொடர்பாக 1247 வர்த்தகர்களும், குறைந்த எடையுடைய பாணைத் தயாரித்த பேக்கரி உரிமையாளர் 394 பேரும், சட்டவிரோதமான முறையில் அளவை நிறுவைகளை பாவித்த 360 வர்த்தகர்களும் இந்த திடீர் முற்றுகைகளின் போது கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் அவர்களிடமிருந்து அபராதமாகவே 21 இலட்சத்து 98 ஆயிரம ரூபா அறவிடப்பட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் பணிப்பாளர் கே.பிரேமசிறி குமார மேலும் தெரிவித்தார்.

# கல்வி அமைச்சின் 23 அதிகாரிகள் 'பிரிவே கேணல்'களாக பதவி உயர்வு



(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் 1 பாடசாலை அதிபர்கள் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள் 23 பேரை 'பிரிவே கேணல்' ஆக பதவி உயர்த்தும் வைபவம் நேற்று முன்தினம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது.

தேசிய மாணவர் படையணியின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவையாற்றியமைக்காக இவர்கள் பிரிவே கேணல் ஆக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் மற்றும் நாட்டின் முன்னணிப் பாடசாலைகளைச் சேர்ந்த 21 அதிபர்கள் ஆகியோருக்கே இப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

'1881 இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மாணவர் படையணியின் நீண்ட கால வரலாற்றில் பல முக்கிய அதிகாரிகள் இப் பதவி உயர்வைப் பெற்றுள்ளனர்.

இங்கு உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், தேசிய மாணவர் படையணி போன்ற கல்வி சாரா நடவடிக்கைகளை பாடசாலைகளில் முன்னெடுப்பதன் மூலம் மாணவர்களது தலைமைத்துவம் மற்றும் தன்னமபிக்கையை முன்னேற்ற வழிகோரும் எனத் தெரிவித்தார்.

மேலும் தனது பாடசாலைக் காலத்தில் அதிபராக இருந்த கேணல் வி.எஸ்.குதலிகம ஒரு இராணுவ அதிகாரி என்றும், அவருக்கும் சாதாரண அதிபருக்கும் இடையே தெளிவான வித்தியாசம் இருந்ததாகவும் தெரிவித்தார்.

புதிதாக பதவி உயர்த்ப்பட்டவர்கள் இராணுவ சேவை தொடர்பான தமது அறிவை மேலும் அதிகரித்து நாட்டின் நன்மைக்காக சிறந்த சேவையாற்றுவார்கள் என தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய மாணவர் படையணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந நிகழ்வில், கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜயரத்தின, மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) திரு.எஸ்ஹெட்டியாராட்சி, தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர, சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் புதிதாகப் பதவி உயர்த்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் திணைக்களத்திற்கு குதிரைகள் கொள்வனவு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படைப் பிரிவுக்கு 18 குதிரைகளைக் கொள்வனவு செய்ய அத்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 50 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ள நிலையில், அதற்காக அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் கேள்விப்பத்திரங்கள கோரப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்படவுள்ள விசேட ரகத்தைச் சேர்ந்த குதிரைகளுக்காக தலா 2.7 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பொலிஸ் குதிரைப்படைப் பிரிவானது நாட்டின் மிகவும் மரியாதைமிக்க விழாப் படையணியாகத் திகழ்கின்றது.

இந்நிலையில், தற்போது மேற்படி பிரிவில் 40 குதிரைகள் காணப்படுகின்ற போதிலும் அவை தீவிரமாக கடமையாற்றும் வயதைக் கடந்துள்ளன. இவை அதிகளவான மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்காகவும், தேசிய சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சிகளின்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாலம்பே மருத்துவக் கல்லூரிக்கு எதிரான மனு நிராகரிப்பு

(கொழும்பு)

மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவொன்றை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.


இந்த மனுவை இரண்டு வைத்திய அதிகாரிகளும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவரும் தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்க மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களான பீஏரத்னாயக்க, எஸ்.ஐ. இமாம். ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் இந்த மனு நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு சட்டபூர்வமாக வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இதன்போது சுட்டிக்காட்டினார்.

சட்டத்தரணியின் இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட உயர நீதிமன்றம் மனுவை நிராகரித்துள்ளது.

# வாய், மேற்தாடை முகம் பகுதிகளிற்கு வவுனியாவில் விசேட சிகிச்சைப்பிரிவு



(வவுனியா)

கடந்த மூன்று தசாப்த கால மாக வட மாகாணத்தின் எந்த வொரு பகுதியிலும் இல்லாத வாய், மேற்தாடை, முகம் ஆகி யவற்றிக்கான விசேட சிகிச் சைப் பிரிவு கடந்த செப்ரெம்பர் 02 ஆம் திகதி வவுனியா பொது வைத்தியசாலையில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

பல், மேற்தாடை, முக சிகிச் சைக்காக, மக்கள் கொழும்பு, கண்டி போன்ற பிரதேசங்களி லுள்ள வைத்தியசாலைகளுக் குச் செல்ல வேண்டியிருந்தது. நீண்ட தூரம் செல்ல வேண்டி யிருந்தமையால் மக்கள் சரி யான முறையில் தொடர்ச் சியான சிகிச்சைகளைப் பெற் றுக்கொள்ள முடிவதில்லை.

ஆகவே சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வட மாகாண சுகாதார அமைச்சு இச்சிகிச் சைப் பிரிவினை வவுனியா பொது வைத்தியசாலையில் ஆரம்பித்துள்ளது. இப்பிரிவிற்கு வாய், மேற்தாடை, முக சிகிச்சை நிபுணர் சுகாதார அமைச்சி னால் நியமனம் செய்யப்பட வுள்ளார்.

இச்சிகிச்சைப் பிரிவ் வட மாகாணத்தினை சேர்ந்த 1.2 மில்லியன் மக்களுக்கும் அனு ராதபுரம் போன்ற அயல் மாவட்ட மக்களுக்கும் சேவை வழங்க வுள்ளது. சிகிச்சை நிபுணருடன் கூடிய வாய், மேற்தாடை, முக சிகிச்சைப் பிரிவு இப்பிராந் தியத்தில் அமைக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

விழுவதனால் ஏற்படும் அதிர்ச்சி, வீதி விபத்து ஆகி யவற்றினால் முகப்பகுதியில் ஏற்படும் காயங்கள் மற்றும் உதட்டுப்பிளவு, போன்றவற் றுக்கான சிகிச்சைகள் இப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் வாய், மேற் தாடை, முகசிகிச்சைப் பிரிவிற்கு உரிய நேரத்தில் வருகை தரு வதன் மூலம் வாய்ப்புற்று நோயைக் குணப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது பல் வைத்திய சேவை பிரதிப் பணிப்பாளர் ஜே.எம்.டபிள்யூ. ஜெயசுந்தர பண்டார மற்றும் வட மாகாண சுகாதார அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் இணைந்து இப் பிரிவினை ஆரம்பித்து வைத் தார்கள். மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலா நிதி (திருமதி) ஆர்.யூட், வவு னியா மாவட்ட பிராந்திய சுகா தார பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.மகேந்திரன், வவு னியா பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத் திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி, வைத்திய ஆலோசகர்கள், வைத்தியர்கள் மற்றும் வவுனியா பொது வைத்திய சாலை உத்தியோக்த்தர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# அச்சுவேலியில் 150 பாகற்கன்றுகள் விசமிகளால் முற்றாக அழிப்பு

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு செம்பியன் திடல் பகுதியில் அமைந் துள்ள விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டு விளைச்சலுக்குத் தயார் நிலையில் இருந்த சுமார் 150 பாகற் கன்றுகள் இனந்தெரியாத விசமிகளால் முற்றாக அழிக்கப்பட்டுளளது. அதுபற்றி மேலும் தெரியவருவதாவது.

ஆவரங்கால் கிழக்கு நவோதயா வீதிப் பகுதியில் வசித்து வரும் குணம் எனும் விவசாயியினால் செம்பியன் திடல் பகுதியில் சுமார் ஒன்றரைப் பரப்பு விவசாய நிலத்தில் 150 பாகற் கன்றுகள் நாட்டப்பட்டு மிகவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வந்த வேளையில், அவை விளைச்சலுக்குத் தயாராக இருந்த நிலையில் இரு தினங்களிற்கு முன்னர் இரவு வேளையில் இவ் விளை நிலப்பகுதிக்குள் நுழைந்த விசமிகள் அங்கிருந்த அனைத்துப் பாகல் கன்றுகளையும் பிடுங்கி எறிந்தும், வெட்டியும் முற்றாக நாசப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற மறு நாள் காலை தோட்ட உரிமையா ளருக்கு அயலவர்களால் விடயம் தெரிவிக்கப்பட்டு அவர் தோட் டத்திற்கு சென்றிருந்த வேளை அங்கு அனைத்துக் கன்றுகளும் வாடிய நிலையில் காணப்பட்டதைக் கண்டு மிகவும் ஆறாத் துயரத்துடன் அவர் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வாறு விசமிகளால் அழிக்கப்பட்ட பயிரினால் மேற்படி விவசாயிக்கு சுமார் 75 ஆயிரம் ரூபா வரை நட்டம் ஏற் பட்டிருப்பதாவும் ஏனைய விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (03)

# அதிபர் இராசதுரையின் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் நினைவுப் பேருரை நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'எம்மை நாமே செதுக்குவோம்' என்னும் விடயம் பற்றி சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நினைவுப் பேருரை வழங்கவுள்ளார். 'ஆளுமையின் வழிகாட்டி' என்னும் தலைப்பில் த.தயாபரன் 'என்னை செதுக்கிய சிற்பி' என்னும் தலைப பில் செல்வன் வீ.தயாளன் ஆகியோர் கவிதாஞ்சலி நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் நினைவஞ்சலியை பழைய மாணவர் சங்க தலைவர் ந.இராஜதேவன், ஆசிரியர் வட்டத் தலைவர் வீ.தயாபரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 11.10.2012

அவலங்களை மூலதனமாக்கும் அநாகரிக அரசியல்

நோர்வேயின் தீர்மானத்தால் வீதிக்கு இறங்கிய பெற்றோர்

முதலிரவில் உளறிய உண்மை

மரணத்தில் முடிந்தது திருமணம்!!






வீரப்பனை மடக்கியது எப்படி?

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு

## விசாரணைக்கு உத்தரவு

International Cricket Council

(டுபாய்)

நடுவர்கள் ஆட்ட நிர்ணய சதியில் ஈடு பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது;

ஆட்ட நிர்ணயச் சதி குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்திய தொலைக்காட்சி நிறுவனத்திடம் தகவல்களை அளித்து உதவுமாறு கேட்டுள்ளோம்.

ருவென்ரி 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டி யில் நடுவர்களாகப் பணிபுரிந்தவர்கள் யாரும் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை. அவ்வாறு ஈடுபட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடுவர் பணி என்பது உன்னதமானது. அதை யாரும் துஷ்பிரயோகம் செய்ய இடமளிக்கக்கூடாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.சி.சி. கேட்கும் அனைத்து விபரங்களையும் அளிக்கத் தயார் என இந்திய தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேபோல பங்களாதேஷ் கிரிக்கெட் சபையும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# கிரிக்கெட் சூதாட்டம்
## நடுவர்கள் ஆட்டம் அம்பலம்



(புதுடில்லி)


கிரிக்கெட் சூதாட்டத்தில் நடுவர்களும் ஈடுபட்ட அதிர்ச்சி செய்தி வெளியாகியுள்ளது. இதில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த ஆறு நடுவர்கள் பிடிபட்டனர்.

கடந்த ஐ.பி.எல். தொடரின் போது இந்தியாவின் ஸ்ரீஸ்தவ் உள்ளிட்ட ஐந்து வீரர்கள் உள்ளூர் தொடரிலும் பிக்சிங்கில் ஈடுபட்டதை, இந்தியா தொலைக்காட்சி அம்பலப்படுத்தியது . தற்போது, மீண்டும் தனது புலனாய்வுச் செய்தியில் நடுவர்களின் மோசமான செயற்பாட்டை வெளிக்கொண்டு வந்துள்ளது.

ருவென்ரி–20 உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு கடந்த ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதத்தில் இந்த புலனாய்வு நடந்தது. இதில் பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், பங்களாதேஷின் நாதிர் ஷா மற்றும் இலங்கையின் காமினி திசநாயக்க, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே ஆகிய 6 நடுவர்கள் பிடிபட்டனர். இவர்கள் போட்டியின் போது ஆடுகளம், அணி குறித்த விபரம், வீரர்கள் அவுட் இல்லை என்றாலும் அவுட் கொடுப்பது, அவுட்டானால், அவுட் தர மறுப்பது என, பல வேலைகளை பணத்துக்காக செய்ய முன்வந்துள்ளனர். சமீபத்தில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதிய ருவென்ரி–20 உலக கோப்பை பயிற்சிப் போட்டியில், நடுவராக பங்கேற்ற சாகரா கல்லகேயும் இதில் சிக்கினார். இவர், இதுவரை 4 ஒருநாள், 2 டெஸ்ட் என, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் விளையாடிய போட்டிகளுக்கு 4ஆவது நடுவராக இருந்துள்ளார். பல்வேறு ருவென்ரி–20 போட்டிகளிலும் நடுவராக இருந்தார்.

சமீபத்தில் முடிந்த இலங்கை பிறிமியர் லீக் ருவென்ரி–20 தொடர் அரையிறுதி, இறுதியில் ரூ. 15 ஆயிரத்துக்காக பிக்சிங்கில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. ருவென்ரி–20 உலக கோப்பை தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதிய பயிற்சிப் போட்டியில் பிக்சிங் செய்துள்ளார். அதாவது ரூ. 50 ஆயிரம் பெற்றுக் கொண்டு, ஆடுகளம், நாணயச் சுழற்சி விபரம், வானிலை அறிக்கை, இரு அணியிலும் விளையாடும் 11 வீரர்கள் விபரத்தை, முன்னதாகவே அளித்துள்ளார். தவிர, போட்டியில் எவ்வித பிரச்சினை ஏற்பட்டாலும், மற்றவர்களை சரிக்கட்டி, விரும்பும் அணிக்கு சாதகமாக நடக்க ஒப்புக் கொண்டார். வீரர்களைப் போல நடுவர்களும், இப்படி பணத்துக்காக பிக்சிங் செய்ய முன்வந்தது, வேலியே பயிரை மேய்ந்த கதையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரப்படுத்தலில் இலங்கை முதலிடம்



(டுபாய்)


சர்வதேச கிரிக்கெட் சபையின் ருவென்ரி-20 போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இலங்கை அணி தொடர்ந்தும் காணப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரின் நடுவே முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணி, முதன்முறையாக ஒரு தொடரின் பின்னர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உலக ருவென்ரி-20 தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி ஏனைய அணிகளை விடத் தொடர்ச்சியான, சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

முதலிடத்தில் காணப்படும் இலங்கை அணி, இரண்டாமிடத்தைப் பிடித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட 6 புள்ளிகள் அதிகமாகப் பெற்று முதலிடத்தில் தெளிவான நிலையில் காணப்படுகிறது. இந்திய அணி மூன்றாமிடத்தில் காணப்படுகிறது.

வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல்: இலங்கை, மேற்கிந்திய தீவுகள், இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, பங்களாதேஷ், அயர்லாந்து, சிம்பாப்வே.



நியூசிலாந்தில் உள்ள அக்லாந்து நகரில் பிரேக்கர்ஸ் கூடைப்பந்து பயிற்சிப் போட்டியைக் காணச் சென்ற ஜமேக்காவின் தடகள வீரர் உசைன் போல்ட் தமது ஸ்டைலில் நடனம் ஆடுவதைக் காணலாம். இதேவேளை, ருவென்ரி –20 உலகக் கிண்ணம் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.



ருவென்ரி–20 உலகக் கிண்ணத்தை மேற்கிந்தியத்தீவு அணி வென்றது. கொழும்பில் உள்ள சுதந்திர நினைவுச் சின்னத்தின் முன், சம்பியன் கிண்ணத்துடன் காட்சி கொடுக்கும் மேற்கிந்தியத்தீவு அணிக் கப்டன் சமி.



பார்சிலோனா, ரியல் மட்ரிட் அணிகளிடையே நடந்த கால்பந்து போட்டி 2–2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இந்தப் போட்டியில் நட்சத்திர வீரர்கள் லயனல் மெஸ்ஸி (பார்சிலோனா), கிறிஸ்டியானோ றொனால்டோ தலா 2 கோல் போட்டு அசத்தினர்.

# இங்கிலாந்து பிறீமியர் கால்பந்து
## இரண்டு முன்னணி அணிகள் வெற்றி

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் போட்டிகளில் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ், மன்செஸ்டர் யுனைட்டட் ஆகிய அணிகள் வெற்றிபெற்றன. சௌதம்படன், ஃபுல்ஹாம் அணிகளுக்கிடையிலான போட்டியும், லிவர்பூல், ஸ்ரோக் அணிகளுக்கிடையிலான போட்டியும் சமநிலையில் நிறைவடைந்தது.

சௌதம்டன் அணிக்கும், புல்ஹாம் அணிக்குமிடையிலான போட்டி 2-2 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. சௌதம்படன் கழகம் சார்பாக 4ஆவது நிமிடத்திலும், 90ஆவது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டன. ஃபுல்ஹாம் கழகம் சார்பாக 69ஆவது நிமிடத்திலும், 88ஆவது நிமிடத்திலும் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

லிவர்பூல் அணிக்கும், ஸ்ரோக் அணிக்குமிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல்களைப் பெறத் தவறியதன் காரணமாக போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இப்போட்டியில் ஸ்ரோக் அணி சார்பாக 6 மஞ்சள் அட்டைகள் பெறப்பட்டிருந்தன.

ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணிக்கும், அஸ்டன் வில்லா அணிக்குமிடையிலான போட்டியில் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பாக 58ஆவது, 67ஆவது நிமிடங்களில் கோல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கும், நியூகாசில் யுனைட்டட் அணிக்குமிடையிலான பேர்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சார்பாக 8ஆவது, 15ஆவது, 71ஆவது நிமிடங்களில் கோல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

# விளையாட்டுச் செய்திகள்

# மாகாண மட்ட கரப்பந்தாட்டம்
## இரு பிரிவிலும் யாழ். மாவட்டம் சம்பியன்



(கிளிநொச்சி)

வடமாகாண அணிகளுக்கிடையில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண், பெண் என இரு பிரிவுகளிலும் யாழ். மாவட்டம் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாண காரியாலயத்தினால், 28ஆவது ரூப வாஹினி கரப்பந்து போட்டி கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இப் போட்டிக்கு வடமாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களிலும் இருந்து கரப்பந்து அணிகள் கலந்து கொண்டன. பெண்கள் போட்டியில் இறுதிப் போட்டியில் யாழ். அணியும் கிளிநொச்சி அணியும் மோதின. இதில் யாழ். அணி வெற்றி பெற்று 10,000 ரூபா பணப் பரிசினைப் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட கிளிநொச்சி அணிக்கு 7,500ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட முல்லைத்தீவு அணிக்கு 5000 ரூபா வழங்கப்பட்டது.

ஆண்கள் போட்டியில் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மேற்கு அணியும் ஆவரங்கால் சிகரம் அணியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் சிகரம் அணி முதலிடத்தைப் பிடித்துக்கொண்டதுடன் வெற்றிபெற்று 10,000ரூபா பணப்பரிசையும் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஆவரங்கல் மேற்கு அணிக்கு 7500ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி மாவட்ட அணி பெற்றுக் கொண்டது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சரத்சந்திரபாலவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபாவதிகேதீஸ்வரன் கலந்துசிறப்பித்தார்.

(12, 93)

# ஜப்பான் செல்லும் அணியில் வடமாகாண வீரருக்கு இடம்



ஜப்பான் கால்பந்தாட்ட லீக்கின் அழைப்பின் பேரில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 14 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்ட அணி ஜப்பானுக்கு கடந்த சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளதாக யாழ். மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தின் இணைப்பாளர் மரியதாஸ் பேர்ட்டி பெனிஸ்ரர் தெரிவித்தார். வடக்கு, கிழக்கு வீரர்கள் உட்பட 22 பேர் இவ்வணியில் இடம்பெற்றுள்ளார்கள். 07ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இப்போட்டி நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜப்பான் செல்லும் அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த எஸ். அன்ரனிராஜ் இடம் பிடித்துள்ளார். அத்துடன் உதவிப் பயிற்சியாளராக யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் பேர்ட்டி கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மறக்க முடியாத நாள்

(கொழும்பு)

ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியமை என் வாழ்நாளில் மறக்க முடியாததொரு நிகழ்வு என மேற்கிந்தியத்தீவு அணிக் கப்டன் டரன் சமி தெரிவித்தார். எங்கள் நாட்டில் உலகக் கோப்பையை வென்றது போல் உணர்கிறோம். சரியான நேரத்தில் இந்த உலகக் கோப்பையை கைப்பற்றி உள்ளோம். எங்களுக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உலகக் கிண்ணத்தை இரசிகர் பீட்டர் மத்யூசுக்கு அர்ப்பணிக்கிறோம். மழையிலும், வெயிலும் மைதானத்தில் வந்து அவர் எங்களை உற்சாகப்படுத்தியவர் ஆவார். உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது என் வாழ்நாளில் மறக்க இயலாது எனவும் அவர் தெரிவித்தார்.

# றெட்றேஞ்சர் அணி முதலிடம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் 'றெட்றேஞ்சர்' முதலிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம், விளையாட்டுத்துறை அமைச்சு இணைந்து நடத்தும் தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களை இணைத்துக் கொள்வதற்கான முதல் கட்டப் போட்டிகள் பிரதேச செயலகப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்றது. இதில் மானிப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட 21 வயதுப் பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் மகாத்மாகாந்தி அணியும் றெட்றேஞ்சர் அணியும் மோதின. இதில் றெட்றேஞ்சர் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

(93)

# சர்வதேச போட்டியில் பங்குபெறுவோருக்கு பல்கலை அனுமதியில் பிரத்தியேக புள்ளி

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் சர்வதேச மட்டப் போட்டிகளில் பங்கு பெறத் தகுதி பெறும் மாணவர்கள் ஐந்து பேருக்கு பல்கலைக்கழக அனுமதிக்காக பிரத்தியேக புள்ளிகள் வழங்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுத்துறைக்கு புத்துயிர் அளிக்கும் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளார். புதிய விளையாட்டுக் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்த அவர் பணித்துள்ளார்.


இலங்கைப் பாடசாலைகளில் ஐந்து சதவீதமான மாணவர்களே சிறுவயது முதல் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். உயர்கல்வியின் போது அது ஒரு சதவீதத்திற்கும் குறைவாகிவிடுகிறது.

எனவே அடுத்த வருடம் முதல் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி அதிலிருந்து சர்வதேசமட்டப் போட்டிகளில் பங்கு பெறத் தகுதி பெறும் மாணவர்கள் ஐந்துபேருக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான பிரத்தியேக புள்ளிகள் வழங்கப்படும்.


இதேவேளை, மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசத்தின்போது வழங்கப்படும் சலுகைகளில் ஒன்றாக மேலதிகமாக ஒருவருடம் மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து தமது கற்கை நெறியை தொடர்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படும். அதாவது 3 வருட பாட நெறிக்கு 4 வருடம் வழங்கப்படும்.

வர்த்தக ரீதியிலான அரச நிறுவனங்கள் மற்றும் அரச, தனியார் வங்கிகளுடன் பல ஒப்பந்தங்களைக் கைசாத்திட்டுள்ளோம். இதன் மூலம் பல வருடங்களுக்கு அவர்களது அனுசரணையை விளையாட்டுப்போட்டிகளுக்காக பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி ஆகியவற்றுடன் 25 மில்லியன் ரூபாவிற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகி பின்னர் கல்வியை இடைநடுவில் கைவிடும் வீரர்களுக்கு வங்கிகளில் தொழில் வழங்க உடன்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.



கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் வீனஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியாக நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டி கடந்த 7ஆம் திகதி புத்தூர் சொர்க்கதிடல் சரஸ்வதி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆவரங்கால் வீனஸ் அணியும், புத்தூர் விக்னேஸ்வரா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் வீனஸ் அணி கிண்ணம் வென்றது. இப்போட்டி யூ.ஆர். ப்ராண்ட் பவுண்டேன் நிறுவன அனுசரணையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



# ஐன்ஸ்டீனை வென்றவள்!

இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீனை விட, 12 வயது இங்கிலாந்து பள்ளிக்கூடச் சிறுமிக்கு ஐக்யூ அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது. இங்கிலாந்தின் லிவர்பூல் பகுதியில் வசிப்பவள் ஒலிவியா மேனிங். வயது 12. இவள் சிறு வயதில் இருந்தே புத்திசாலியாக திகழ்கிறாள். எந்தக் கடினமான விஷயத்தையும் சர்வ சாதாரணமாக புரிந்து கொள்கிறாள். கடினமான கணக்குகளுக்கு சில வினாடிகளில் தீர்வு காண்கிறாள். இவளுக்கு புத்திக் கூர்மை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இந்நிலையில், உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான “மென்சா சொசைட்டி”, வழக்கமாக நடத்தும் திறன் தேர்வை அறிவித்தது. இந்நிறுவனம் உலகில் உள்ள சிறுவர், சிறுமிகள், இளைஞர்களின் ஐக்யூவை அறிய தேர்வு நடத்தி வருகிறது.


இந்தத் தேர்வில் ஒலிவியாவும் பங்கேற்றாள். தேர்வு முடிவில் ஒலிவியா 162 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தாள். இது ஜேர்மனியை சேர்ந்த நோபல் பரிசு பெற்ற புகழ்பெற்ற பௌதிக விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் பௌதிக விஞ்ஞானி ஹொக்கிங் ஐக்யூவை விட 2 மதிப்பெண்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து உலகில் ஐக்யூ அதிகம் உள்ள சிறுமி என்று ஒலிவியாவை மென்சா அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. மென்சா தேர்வில் முதலிடம் பிடித்த பின்பு, அவள் படிக்கும் லிவர்பூல் பாடசாலையில் ஒலிவியாவை கொண்டாடுகின்றனர். இதுகுறித்து ஒலிவியா கூறுகையில், “ஐக்யூ பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின், ஏராளமானோர் என்னிடம் வந்து வீட்டுப் பாடம் செய்ய உதவி கேட்கின்றனர். எனக்கு சவால்களை சந்திக்கப் பிடிக்கும். எந்நேரமும் புதிய சிந்தனையுடன் இருக்க விரும்புகிறேன்” என்கிறாள்.

# பாம்புப் பண்ணை

பாம்புகள் என்றால் நம்மில் பலருக்கு அதீதப் பயம். குரங்குகளுக்கும் பாம்புகளைக் கண்டால் பயம். மனிதர்களின் பாம்பு குறித்த பயம் குரங்குகளாக இருந்த காலத்திலிருந்து தொடர்வது என்று சில உளவியலாளர்கள் சொல்கிறார்கள் என்றாலும், அதெல்லாம் ஏதோ சும்மா ஒரு ஊகத்தில் சொல்வது போலத்தான் தெரிகிறது. ஆனால் நம்மிடமிருக்கும் பயத்துக்கான காரணங்கள் தெரிந்துவிட்டால் மட்டும் பயம் போய் விடுகிறதா? பயம் அதுபாட்டுக்குத் தொடர்கிறது. இதை மனதில் வைத்துத்தான், தமிழில் ஒரு எழுத்தாளர் குரங்குகளுக்குப் பாம்புகள் மீது இருந்த பெரும் பீதியை வைத்து ஒரு குறியீட்டுக் கதை எழுதினார். சமகாலத் தமிழக அரசியல் குறித்த ஒரு அங்கதக் கதையாக அதைப் பார்க்க முடியும் என்பது அத்தனை எளிதாகப் புலப்படாததாலோ என்னவோ அவர் வீட்டில் கற்கள் எறியப்படவில்லை. அதிருக்கட்டும், இங்கு ஒருவர் பாம்புகளை வைத்து ஏராளமாகட பணம் பண்ணுவது எப்படி என்று அறிந்து அதைச் செய்கிறார். பாம்பு விஷத்தை வடித்து அதை மருந்து நிறுவனங்களுக்கு விற்கிறார். எல்லா நாடுகளிலும் இதைச் செய்கிறார்கள் தானே என்கிறீர்களா? இவர் அமெரிக்காவில் இதைச் செய்வதால் இந்த மனிதரின் செயலை அப்படி வியந்து ஒரு கட்டுரை எழுதுகிறார்கள். இந்த இணையப்பக்கம் சென்றால் பார்க்கலாம்.

http://www.mensjournal.com/magazine/print-view/ken-darnell-snake-wrangler-20120830

# விலங்குகள் பற்றி என்ன தெரியும்?



- விலங்குகளின் அரசன் என்று அழைக்கப்படும் சிங்கத்தின் ஆயுள் 15 ஆண்டுகள்தான்.
- ஒட்டகத்தின் முதுகெலும்பு வளைந்து இருக்கும் என்று நாம் நினைப்பது தவறு, அதன் முதுகெலும்பு நேராக இருக்கும்.
- கரப்பான் பூச்சி எப்போதும் சரியாக 16 முட்டைகள் இடும்.
- பிறந்து ஒரு வருடமே ஆன திமிங்கலம் தன் தாயைப் போலவே உருவத்தில் பெரிதாக இருக்கும்.
- யானையின் கர்ப்ப காலம் 22 மாதங்கள். பொதுவாக யானை ஒரு குட்டிதான் போடும்.
- குதிரையின் கர்ப்பகாலம் 342 நாள்கள். தகுந்த இடம் அமையவில்லை எனில் குதிரை தன் பிரசவத்தை ஒரு மாதம் வரை தள்ளிப்போடும்.
- முயலின் கர்ப்பகாலம் ஏழு மாதம்தான். 15 குட்டிகள் வரை போடும்.
- பூனையின் கர்ப்ப காலம் 2 மாதம். கர்ப்பமாயிருக்கும் பூனை நாக்கை வெளியே தள்ளி மூச்சு வாங்கினால் பிரசவ நேரம் என்று அறியலாம்,
- ஒட்டகச்சிவிங்கியின் கர்ப்ப காலம் 14 மாதம். ஒட்டகச்சிவிங்கியும் பொதுவாக ஒரு குட்டிதான் போடும்.
- நாயின் கர்ப்பகாலம் 64 நாள்கள்தான். நாய் பொதுவாக 4 முதல் 8 குட்டிகள் வரை போடும்.

# ஒல்லியாகும் மீன்கள்!


பருவநிலை மாற்றத்தாலும் கடல் வெப்பம் அதிகரிப்பதாலும் மீன்களின் உடல் எடை குறைந்துகொண்டே வருகிறது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். 50 ஆண்டுகளில் மீன்களின் பருமன் 20 சதவீதம் வரை குறைந்துவிடும் என்று கூறியுள்ளனர். கடல் வெப்பம் தொடர்பாக கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலையின் மீன்வள ஆய்வு மையம் சமீபத்தில் ஒரு ஆய்வு நடத்தியது. உலகம் முழுவதும் பருவநிலை மாற்றம் மற்றும் கடல் வெப்பம் அதிகரிப்பால் கடல் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டது. கம்ப்யூட்டர் உதவியுடன் 600 இற்கும் மேற்பட்ட கடல் மீன் வகைகளின் மாதிரிகள் உருவாக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி ஆய்வுக் குழுத் தலைவர் பேராசிரியர் வில்லியம் சியூங் கூறியதாவது; சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் பருவநிலையில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. கடல் வெப்பமும் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், மீன்களின் வாழ்க்கைமுறை பாதிக்கப்படுவது தெரிந்ததே. கடல் வெப்பத்தால் மீன்களின் உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது என தற்போது தெரியவந்துள்ளது.



மிகச்சிறிய அளவில் தொடங்கி பல தொன் வரை பல்வேறு அளவுகளில் மீன்கள் இருக்கின்றன. கடல் வெப்பம் அதிகரிப்பால், மீன்களின் அதிகபட்ச வளர்ச்சியானது குறைந்துகொண்டே போகிறது. 2000இல் இருந்ததைவிட மீன்களின் எடை 2050இல் 14 முதல் 20 சதவீதம் வரை குறையும் என்று தெரிகிறது. பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகளில் உள்ள கடல்களில் (இந்தியப் பெருங்கடல், வங்கக்கடல், அரபிக்கடல் உட்பட) இந்தப் பாதிப்பு அதிகம் இருக்கிறது.

மீன்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி பிரிட்டிஷ் கொலம்பியாவின் மீன்வள ஆய்வு மையம் பல ஆண்டுகளாக ஆய்வில் ஈடுபட்டு வருகிறது. 30 ஆண்டுகளுக்கு முன்பு டானியல் பாலி என்ற ஆராய்ச்சியாளர் தலைமையில் இதுதொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டது. தண்ணீரில் உள்ள ஒட்சிசனை எடுத்துக் கொண்டுதான் மீன்கள் தொடர்ச்சியாக வளர்கின்றன. கடல் வெப்பம் அதிகரித்தால் போதிய ஒட்சிசன் கிடைக்காமல் மீன்களின் உடல் வளர்ச்சி குறையும் என்று ஆய்வு முடிவில் டானியல் கூறியிருந்தார். அதன் அடிப்படையிலேயே தற்போதைய ஆய்வு நடத்தப்பட்டது.


# காதல் என்றால் என்ன?




நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவளைச் சந்தித்தேன். அவள் எங்களுடன் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தாள். சினிமா, சமூக மாற்றத்துக்கான கருவியாக பரிமாணம் எடுப்பதில் அவள் பிரத்யேக விருப்பம் கொண்டிருந்தாள். 'அந்தப் பயிற்சி எட்டு வாரங்கள் நடந்தன. அதற்குப் பிறகு அவள் பிரிந்து சென்றுவிட்டாலும் நாங்கள் தொடர்பில் இருந்தோம். நண்பர்களாக அப்போதிருந்து இருக்கிறோம். அவள் திரும்பச் சந்தித்தபோது திருமணம் முடிப்பது பற்றிய அவளது திட்டம் என்னவென்று பேசினோம். ஆனால் அதை மாண்டவி புறக்கணித்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஐந்தாண்டுகளுக்கும் மேலாக அவளை விரும்பும் ஒருவனைக் காத்திருக்க வைத்துக்கொண்டிருக்கிறாள். “எனக்குத் தெரியவில்லை. அவனை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் காதல் என எனக்குச் சொல்லப்பட்ட இசை எதுவும் எனது காதில் ஒலிக்கவில்லை. உனக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமானால்; காதல் என்ற கருத்தின் மேல் எனக்கு நம்பிக்கை போய்விட்டது. அதை அங்கீகரிக்கும் திறன் என்னிடம் போய்விட்டதாக இருக்கலாம். நான் எனது பெற்றோரை மாப்பிள்ளை பார்க்கச் சொல்லியுள்ளேன். அது சரிப்படவில்லையெனில் என்னால் பழியையாவது அவர்கள்மீது போடமுடியும்” என்றாள் மாண்டவி.

மாண்டவியின் தர்க்கம் என்பது தனிப்பட்ட அனர்த்தமான விதிவிலக்கா? உறவில் இருக்கும் பத்து திருமணமாகாத பெண்களிடம் பேசிப்பாருங்கள். அவர்களில் பாதிப் பேர் மாண்டவியுடன் ஒத்துப்போகிறவர்களாக இருப்பார்கள். ஒருவர் காதலில் இருக்கிறார் என்பதை உண்மையிலேயே அறியமுடியுமா? நான் காதலில்தான் இருக்கிறேனா? அதை எப்படி என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்? சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்குத் தெரியாததை நீங்கள் காதலிக்க முடியாது. உங்களால் புரிந்துகொள்ளாதவரை உங்களால் நிச்சயம் காதலிக்கவே முடியாது. புரிந்துகொள்ளுதலுக்காக வாழ்க்கையின் பிற அருமையான விஷயங்கள் போலவே இதற்கும் காலம் பிடிக்கும். அதுவரை எல்லாரையும் காதலியுங்கள்...

- பிரசாந்தோ பானர்ஜி -



# சினிமா சினிமா



() மணிரத்னத்தின் "கடல்" படத்தில் கதாநாயகியாக நடித்து வரும் துளசி (ராதாவின் இளைய மகள்), அந்தப் படம் வெளியாகும் முன்பே "யான்" என்ற படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்கிறார். இந்தப் படத்தை பிரபல ஒளிப்பதிவாளர் ரவி கே.சந்திரன் இயக்குகிறார். "கடல்" படம் வெளியாகும் வரை துளசியின் போட்டோக்களை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளித்துள்ளார் மணிரத்னம். இதோ துளசி!

() "பாட்ஷா", "அண்ணாமலை", "வீரா", "பாபா" ஆகிய ரஜினி படங்களை இயக்கியுள்ள சுரேஷ்கிருஷ்ணா, ரஜினியுடன் பணியாற்றிய அனுபவத்தை மையமாக வைத்து "பாட்ஷாவும் நானும்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்தப் புத்தகம் வெளியாகிறது.

() பொதுவாக எந்த நடிகர் - நடிகைகளுமே தங்களது நிஜ வயதை சொல்வதில்லை. ஆனால், "துப்பாக்கி" மற்றும் "மாற்றான்" படங்களில் நடித்து வரும் காஜல் அகர்வால், சமீபத்தில் பிறந்த நாள் கொண்டாடும் போது, "எனக்கு 27 வயது..." என்று, வெளிப்படையாக கூறி உள்ளார். அவரது இந்த வெளிப்படையான பேச்சு, பல நடிகைகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

() ஆர்யா, ஜீவா, ஜெயம் ரவி, விஷால் ஆகிய நான்கு ஹீரோக்களை வைத்து புதிய படத்தை இயக்கவுள்ளார் சுந்தர்.சி. இந்த ஹீரோக்களுடன் இணைந்து நடித்த நடிகைகள். பலர் இந்தப் புதிய படத்தில் நடிக்க இப்போதே நடிகர்களிடம் வாய்ப்புக்காக தூது விட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான்கு இளம் ஹீரோக்கள் நடிக்கும் இந்தப் படத்தில் காமெடி வில்லனாக நடிக்கவிருப்பவர் சந்தானம்.

() "முகமூடி" தன்னை தமிழில் பெரிய நடிகையாக்கும் என்று கணக்குப் போட்ட பூஜா ஹெக்டேவுக்கும், "சகுனி" ப்ரணிதா நிலைமைதான் ஏற்பட்டுள்ளது. அவரை கண்டு கொள்ளவே இல்லை கோலிவுட். இருப்பினும், "என் திறமைக்கேற்ற வாய்ப்பு, "முகமூடி"யில் இல்லை. ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்து பாருங்கள். சூப்பராக நடித்துக் காட்டுகிறேன்..." என, சில டைரக்டர்களிடம் வாய்ப்பு கேட்டு வருகிறார்.




() "சுந்தரபாண்டியன்" படத்துக்குக் கிடைத்துள்ள நல்ல வரவேற்பும் "கும்கி" படத்துக்கான எதிர்பார்ப்பும் லட்சுமி மேனனுக்கு நட்சத்திர அந்தஸ்தை ஏற்படுத்தியுள்ளன. இதையடுத்து அவரைப் பற்றிய கிசுகிசுக்களும் முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டன. தன்னுடைய முகத்தில் உள்ள சிறிய தழும்பை பிளாஸ்டிக் சேஜரி செய்து அகற்றியிருக்கிறார் என்று செய்திகள் வர, "அந்த தழும்பு சிறு வயதிலிருந்தே உள்ளது, அதனால் என் அழகுக்கு எந்த பாதிப்பும் இல்லை, பிளாஸ்டிக் சேஜரி செய்ய எந்த அவசியமும் இல்லை" எனக் கூறியிருக்கிறார் லட்சுமி மேனன்.



() "தமிழ்ப் படம்" இயக்குநர் சி.எஸ்.அமுதன் தனது அடுத்த படத்திற்கு "ரெண்டாவது படம்" என்று தலைப்பு வைத்திருக்கிறார். இதில் இயக்குநர் அகத்தியனின் மகள் விஜயலட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார். இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் கிளாமராக நடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது குறித்து கேட்டால்... "இந்தப் படத்தில் எனக்கு நெகட்டிவ் கேரக்டர். எதையும் தூசு மாதிரி பார்க்கிற பெண். எவ்வளவு திமிரா நடிக்க முடியுமோ, அவ்வளவு திமிரா நடிச்சிருக்கேன். எத்தனை படங்களில்தான் குடும்பப் பெண்ணாகவே நடித்துக் கொண்டிருக்க முடியும். ஏன் நான் கிளாமராக நடிக்கக் கூடாதா?" என்கிறார். சரிதான்!

# விளாம்பழ நிவாரணம்



விளாம்பழம் எலும்புக்கு பலம் தந்து, பித்தத்தை நீக்கி, உடம்புக்குப் பலம் கொடுக்கும். இதில் சுண்ணாம்பு, பொட்டாசியம், இரும்புச்சத்து ஆகிய மூன்றும் அடங்கியுள்ளன. உடலில் இரத்தம் இல்லாதவர்கள், குஷ்டம் உள்ளவர்கள், பலம் குறைந்தவர்கள், பித்தக் கோளாறு உள்ளவர்கள் இந்தப் பழத்தை உண்டால் நல்ல குணத்தைக் காணலாம். கர்ப்பிணிகள் இதனை உண்டால் ஆரோக்கியம் நிறைந்த வலுவான குழந்தைகளைப் பெறுவார்கள். பழுத்த விளாம்பழத்தில் இருக்கும் ஒரே ஒரு விதையே மிகுந்த சத்து உடையது.

விளாம்பழமும், வெல்லமுமாகக் கலந்து பிசைந்து சாப்பிடும் முறை நம்மவர்களுக்கு புதியதல்ல. மிளகாய் வற்றல், பெருங்காயம், உளுத்தம்பருப்பு, வறுத்த உப்புடன் விளாம்பழத்தை சேர்த்து, துவையலாக அரைத்தும் உண்ணலாம்.

நன்கு பழுத்த நான்கு விளாம்பழங்களின் விழுதை எடுத்து, அகன்ற வாயுடைய ஈயப் பாத்திரத்தில் வெந்நீருடன் கலந்து கொள்ள வேண்டும். அது. ஆறின பின்பு சீனி கலந்து சர்பத்தாகச் செய்து மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை குடித்தால் நிற்காத பேதியும் நின்றுவிடும். இதில் லவங்கப்பட்டையும் சேர்த்துக் கொள்ளலாம். விளாங்காய் ஓடுகளை உலர்த்தித் தூளாக்கி வைத்துக் கொண்டு சாப்பிட்டு வந்தால் எல்லாவித விஷங்களும் நீங்கிவிடும். மொத்தத்தில் அனைத்துவித நோய்களைக் கட்டுப்படுத்தும் மருத்துவ நிவாரணி விளாம்பழம் ஆகும்.

# வாளும், மூத்தகுடியும்!



ஔவை நடராசனிடம் பேசும்போது ஜாக்கிரதையாகப் பேச் வேண்டும். அவரிடம் ஒரு சங்கடம். சாதி, மதம், சினிமா, பொருளாதாரம், கண்ணகி சிலை, கல்வி முதலிய விஷயங்களைப் பற்றி அவருக்குப் பல கருத்துகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லிவிட்டு கடைசியில், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஒரு கேள்வி போடுவார்! அந்த விஷயங்களில் நமக்கென்று ஏதாவது ஒரு கருத்து இருந்தால் பிழைத்தோம், இல்லையென்றால் விழிக்க வேண்டும்!

தமிழைப் பற்றி பேச்சு வந்ததால் நான், "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றியவர்கள் நாம் என்று சொல்லிக் கொள்கிறோமே, அதை ஒரு முறை ப.ஜீவானந்தம் பரிகாசம் பண்ணினார். அதெப்படிக் கல்லும் மண்ணும் தோன்றும் முன்னே மனிதன் தோன்றியிருக்க முடியும் என்று கேட்டார்" என்றேன்.

"புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் ஈற்றடி அது. கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்தகுடி என்பது உழவர் பெருமைகளைக் குறிக்கின்றது. கல் என்றால் மலை, மண் என்றால் சமவெளி வயல், வாள் என்பது ஏர்முனை, மலை மட்டுமே இருந்த ஊரில் ஏர் முனையால் நிலத்தைச் சீர்படுத்தி, வயலாக்கினார்கள் தமிழர்கள் என்பது பொருள்" என்றார் டாக்டர் ஔவை நடராசன். அவர் பெயருக்கு முன்னால் "ஔவை" எப்படி வந்தது என்பதற்கு விளக்கம் சொன்னார்.


"எங்கள் சொந்த ஊர் திண்டிவனத்துக்குப் பக்கத்தில் உள்ள ஔவையார் குப்பம். என் தந்தை துரைசாமி பள்ளியில் படித்த சமயம் அதே வகுப்பில் இன்னொரு துரைசாமியும் படித்தார். பெயரில் குழப்பம் வந்ததால், "ஔவையார் குப்பத்திலிருந்து வருபவன் நீ. ஆகையால் ஔவை துரைசாமி என்று வைத்துக் கொள்" என்றார் ஆசிரியர்! அதுமுதல் என் அப்பா ஔவை துரைசாமியாக ஆனார். நான் ஔவை நடராசனாக ஆகிவிட்டேன்" என்றார்!

**('நாலு திசையிலும் சந்தோஷம்' நூலில் ரா.கி. ரங்கராஜன்)**

# ஒப்பரிய சித்திரிப்பு!

தோழர் வில்ஹெம்ஸ் லீப்னெஹ்ட் (1826-1900) சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் கால் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரதும் நண்பர். லீப்னெஹ்ட்டின் பெயர் ஜேர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தது என்று லெனினால் போற்றப்பட்டவர். படிக்கிற ஒவ்வொருவரிடமும் அரசியல் உணர்வை ஏற்படுத்துகிற "சிலந்தியும் ஈயும்" ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய புத்தகம்.

"...பிறகு அந்தப் பயங்கரப் பிராணி முடிகள் மண்டிய தனது கொடுங்கரங்களை நீட்டி ஈயைப் பிடித்துத் தனது கொலைகார அரவணைப்பில் கெட்டியாய் அழுத்துகிறது. அடுத்து அது பலமிழந்து போய் நடுங்கும் ஈயின் உடலைக் கடிக்கிறது. ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று தனது வெறிக்கும் பசிக்கும் ஏற்ப அத்தனை தரம் விழுந்து பிடுங்குகிறது. பாதி உயிர்போன நிலையில் அந்த ஈயை விட்டு விலகுகிறது. பிறகு திரும்பி வந்து மீண்டும் உறிஞ்சுகிறது. பாவம் அந்த ஈ எளிதில் உயிரை இழப்பதில்லை. குற்றுயிரும் குலையுயிருமாய் நெடுநேரம் திணறுகிறது. இரையிடம் இம்மியளவு உயிர்த்துடிப்பு எஞ்சியிருக்கும் வரை அதை விடுவதில்லை. ஈயிடமிருந்து பருக எதுவுமே இல்லாமற் போன பிறகுதான் அதை விடுகிறது." முதலாளித்துவத்தின் கோரத்தை இதைவிட வலிமையாக யார் சித்திரிக்க முடியும்?



**(உதயசங்கர் எழுதிய 'முன்னொரு காலத்திலே' நூலில்)**

# கண்ணுக்குள் ஒரு சகோதரி

**– லெ. முருகபூபதி கட்டுரையிலிருந்து**

இலங்கையில் முதலாவது ஆயுதக்கிளர்ச்சி சிங்கள இளைஞர்களினால் 1971 ஆம் ஆண்டு நடந்தது. அந்தக்கிளர்ச்சி, ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் பலிகொண்டதுடன் அந்த கிளர்ச்சியின் சூத்திரதாரிகளான ரோகண விஜேவீர, லயனல் போப்பகே, உபதிஸ்ஸ கமநாயக்கா, லொக்கு அத்துல, பொடி அத்துல, தர்மசேகர, மகிந்தவிஜேசேகர போன்ற மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் கைதாகியதுடன் முடிவுக்கு வந்தது.

கைதான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற இயக்கத்தின் பணிமனையாக செயற்பட்ட கொழும்பு கொம்பனித்தெரு மலேவீதியில் அமைந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தில்தான் இயககத்தின் சுவரொட்டிகள் எழுதும் வேலைகளும் நடந்துகொண்டிருந்தன.

கொழும்பிலும் அதன் சுற்றுப்பிரதேசங்களிலும் நடந்த பிரசாரக்கூட்டங்களுக்காக தமிழில் சுவரொட்டிகளை எழுதும் பணியிலும் ஈடுபட்டேன். கூடுதலாக சிவப்பு மையே சுவரொட்டிகளுக்கு பயன்படுத்தப் பட்டது. ஒருநாள் சுவரொட்டிகளை எழுதிக்கொண டிருக்கும்போது மைத்துளி ஒரு கண்ணில் விழுந்து விட்டது. கண்களை கழுவி சுத்தப்படுத்தினாலும் கண்ணெரிவு குறையவில்லை. கண்கள் சிவந்தது தான் மிச்சம்.

எனது துன்பத்தை அவதானித்துக்கொண்டிருந்த அந்த அலுவலகத்தில் பணியாற்றிய ஒரு சிங்கள சகோதரி, மதிய உணவு வேளையின்போது என்னருகே வந்து, 'சகோதரரே (சிங்களத்தில் சகோதரயா என்றால் தோழர் என்றும் அர்த்தப்படும்) உங்களுக்கு வீட்டிலிருந்து கண்ணுக்கு ஒரு மருந்து கொண்டுவருகிறேன்.' எனச்சொல்லிவிட்டு புறப்பட்டார்.

நான் சுமார் 30 கிலோ் மீற்றர் தொலைவில் நீர்கொழும்பிலிருந்து தினமும் வேலைக்கு வருவதனால் மதிய உணவையும் கொண்டுவந்துவிடுவேன். ஏனைய தொழிற்சங்க ஊழியர்கள் மதிய உணவுக்காக வெளியே சென்றுவிட்டார்கள். நான் உணவருந்திவிட்டு உறுத்திக்கொண்டிருந்த கண்களை மூடியவாறு ஆசனத்தில் சாய்ந்துகொண்டேன். அப்படியே உறங்கிப்போனேன். வெளியே சென்றவர்களும் திரும்புவதற்கு குறைந்தது ஒரு மணிநேரமாகும்.

சொற்பவேளையில் தனது வீட்டுக்குச்சென்ற அந்த சகோதரி அலுவலகம் திரும்பியிருந்தார். நான் கண்களை மூடி உறங்குவதைப் பார்த்துவிட்டு, என்னைத்தட்டி எழுப்பினார். கண்களைத் திறக்காமலேயே, 'வந்துவிட்டீர்களா?'- என்றேன்.

'ஆம், உங்கள் சிவந்த கண்ணுக்கு மருந்தும் கொண்டுவந்துள்ளேன். எழுந்து வாருங்கள்' என் கரம்பற்றி அழைத்தார். நான் கண்களை திறக்க சிரமப்பட்டேன். அந்த அலுவலகத்தின் பின்புற அறைக்கு அழைத்துச்சென்றார்.

சுவரொட்டிகளுக்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த காகிதங்களை தரையில் விரித்து என்னை அதில் படுக்கச்செய்தார்.

தலைமாட்டில் அமர்ந்துகொண்டு, 'சகோதரயா கண்களை திறவுங்கள். மருந்தை விடவேண்டும்' என்றார்.

'என்ன மருந்து?'- தயக்கத்துடன் கேட்டேன்.

'முதலில் கண்களை திறவுங்கள். பிறகு சொல்கிறேன்.'

நானும் மெதுவாகத் திறந்தேன். ஒவ்வொரு கண்ணையும் தனது விரல்களினல் இமைகளை விரிக்கச் செய்து ஒரு திரவத்தை விட்டார். கண்கள் குளிர்ந்தன.

'சகோதரயா அப்படியே சிறிதுநேரம் கண்களை மூடியவாறு படுத்திருங்கள். சங்கத்தின் ஊழியர்கள் வந்தால் சொலலிக் கொள்கிறேன்." என்றார்

> **சிங்கள மக்கள் அனைவருமே தமிழ் மக்களின் விரோதிகளா? அல்லது தமிழ் மக்கள் அனைவருமே சிங்கள மக்களை வெறுப்பவர்களா?**

'நன்றி'

அவர் எழுந்து தனது கடமைகளை கவனிக்கச் சென்றுவிட்டார். நான் அந்த குளிர்மையான திரவத்தை கண்களினூடே உள்வாங்கிக்கொண்டு மீண்டும் உறங்கிவிட்டேன்.

வெளியே மதிய உணவுக்குச் சென்றவர்கள் அலுவலகம் திரும்பிய அரவம் கேட்டது. நானும் துயில் களைந்து எழுந்தேன். கண்ணெரிச்சல் சற்று குறைந்திருக்கும் உணர்வு.

அந்தச் சகோதரி அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகே சென்று 'மிக்க நன்றி சகோதரி. அது என்ன திரவம்?'- எனக்கேட்டேன்.

அவர் வெட்கம் கலந்த சிரிப்புடன், 'அது வந்து' தாய்ப்பால' என்றார்.

அவரது மனிதாபிமானம் என்னை சிலிர்க் கவைத்தது.

'இதோ தாய்ப்பால் கொண்டுவந்த சிறிய குப்பி.'- அவர் அதனை எனக்கு காண்பித்தார். 'இன்னும் இரண்டு நாட்களுக்கு விட்டால் கண் சுகமாகிவிடும். நாளைக்கும் வேலைக்கு வாருங்கள். மதியம் தாய்ப்பால் விடுகிறேன்.' என்றார்.

'அது சரி. எங்கே பெற்றீர்கள்? '- எனக்கேட்டேன்.

'எனது அக்காவுக்கு சமீபத்தில்தான் குழந்தை பிறந்தது. பாதிக்கப்பட்டு சிவக்கும் கண்களுக்கு தாய்ப்பால் உகந்தது. சில நாட்களுக்கு நீங்கள் சுவரொட்டிகளை எழுதவேண்டாம். நீங்கள் எழுதியிருப்பதைப் பார்த்து நானே எழுதிக்கொடுக்கின்றேன்.'

'உங்களுக்கு தமிழில் எழுத முடியுமா.?'

'எழுத முடியாதுதான், ஆனால் பார்த்து எழுதலாம்தானே. அத்துடன் உங்களிடம் தமிழும் கற்றுக் கொள்ளலாம்.'

அந்தச் சகோதரியை மனதுக்குள் வாழ்த்தினேன்.

வீட்டுக்குத்திரும்பியதும் அம்மாவிடம் நடந்த சம்பவத்தை விபரித்தேன்.

'சரிதான்'பால்'படிப்பு என்று போய் வேறு எங்கும் போய்விடாதே' என்றார் அம்மா. எச்சரிக்கை உணர்வுடன். அம்மா அம்மாதான்,

அந்த சிங்கள சகோதரி சகோதரிதான்.

காலம் ஓடிவிட்டது. முப்பத்தியைந்து ஆண்டுகளும் கடந்துவிட்டன. அம்மாவும் மேலே போய்விட்டார்கள். எனக்கும் திருமணமாகி எனது குழந்தைகளும் வளர்ந்து திருமணமாகி தனிக்குடித்தனம் போய்விட்டார்கள்.

ஆனால் அந்த சிங்கள சகோதரி இப்போது எங்கேயிருப்பார்?

அன்று அவரால் பாதுகாக்கப்பட்ட கண்களின் உதவியால் இன்று இதனை எழுதிக்கொண்டிருக்கின்றேன்.

இந்தக்குறிப்புகளை தமிழ்நாட்டிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த யுகமாயினி இதழில் முன்பொரு சமயம் எழுதியிருந்தேன்.

அப்பொழுது தமிழ்நாடு கலைஞர் தொலைக்காட்சியில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எனது குறிப்பிட்ட சிங்களச்சகோதரியின் செயலை விதந்து பாராட்டி, இப்படி அனைத்து சிங்கள மக்களுமே மனிதாபிமானிகளாக இருந்திருந்தால் இலங்கையில் இனப்பிரச்சினை இவ்வளவுதூரம் வளர்ந்திருக்காது என்று உரையாற்றியதாக யுகமாயினி ஆசிரியர் நண்பர் சித்தன் எனக்கு தொலைபேசி ஊடாகச் சொன்னார்.

இந்தச்சம்பவத்தை வாசகர்களுக்கு இங்கே பதிவு செய்கின்றேன்.

கண்ணுக்கு மொழி ஏது? கருணைக்கு இனம் ஏது?

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் மூல வேர் எது? தமிழின விடுதலைப்போராட்டம் தொடங்கியதன் பின்னணி என்ன?

சிங்கள மக்கள் அனைவருமே தமிழ் மக்களின் விரோதிகளா? அல்லது தமிழ் மக்கள் அனைவருமே சிங்கள மக்களை வெறுப்பவர்களா?

வட்டுக்கோட்டை தீர்மானத்தையும் தமிழ் ஈழக்கோரிகையையும் முன்வைத்த தந்தை செல்வநாயகம் (கொள்ளுப்பிட்டி அல்பிரட் 'வுஸ் கார்டின்) வீட்டில் வேலைக்காரராக இருந்த ஒரு சிங்களவரை 1981 ஆம் ஆண்டு தந்தையின் புதல்வர் சந்திரஹாசனைப் பார்க்கச்சென்றபோது கண்டு கதைத்திருக்கின்றேன்.

யாரைப்பார்க்க வந்திருக்கிறீர்கள் என சிங்களத்தில் கேட்டுவிட்டு, எனக்காக வாயிலைத்திறந்து உள்ளே அழைத்துச்சென்ற அந்த சிங்களவரின் பெயர் எனக்குத் தெரியாது.


ஆனால் அவர் நீண்டகாலம் அங்கே வேலையாளாக இருந்தார் என்பது மட்டும் தெரியும். தமிழர்களுக்கு சிங்களவர்மீது கோபம் வந்தால் முதலில் என்ன சொல்லி திட்டுவார்கள் என்பதும் சிங்களவர்களுக்கு தமிழர்மீது ஆத்திரம் வந்தால் எப்படி அழைப்பார்கள் என்பதும் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

வீரகேசரியில் நான் பணியாற்றும் காலத்தில் ஒரு சுவாரஸ்யமான செய்தி வந்தது. கரவெட்டிப் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டைக்காகவோ ரோந்து நடவடிக்கைக்காகவோ ட்ரக் வண்டியில் சென்றுகொண்டிருந்தபோது யாரோ ராணி ராணி என்று கூக்குரலிட்டுள்ளார். ட்ரக்கில் சென்ற இராணுவத்தினருக்கு அந்த ஒலி ஆமி, ஆமி என்று கேட்டிருக்கிறது. ட்ரக்வண்டி நிறுத்தப்பட்டு இராணுவத்தினர் உஷாரடைந்து துப்பாக்கிகளை ஏந்தியவாறு அந்தப்பிரதேசத்தை சுற்றிவளைத்தனர். ஒரு பெண்ணின் ராணி, ராணி என்ற அவலக்குரல் தொடர்ந்து கேட்கவும் அவ்விடத்துக்கு வந்து பெண்ணை விசாரித்தனர்.

ராணி என்ற ஒரு பெண்குழந்தை கிணற்றில் தவறிவிழுந்துவிட்டதை அறிந்துகொண்ட இராணுவ வீரர்களில் இருவர் உடனே குறிப்பிட்ட கிணற்றில் குதித்து அந்தக்குழந்தையைக் காப்பாற்றினார்கள்.

தேடுதல் வேட்டையில் பல அப்பாவி உயிர்களுக்கு உலைவைக்கும் அவர்களுக்கு அந்தக் கணம் வந்தது மனிதாபிமானம்.

1986 ஆம் ஆண்டு ஒரு செய்திக்காக



யாழ்ப்பாணம சென்று ஆனையிறவு வழியாக தனியார் பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தேன். ஆனையிறவில் பஸ் இராணுவத்தினரின் சோதனைக்காக நிறுத்தப்பட்டது. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் தவிர்ந்த அனைவரும் இறக்கப்பட்டோம். இராணுவ வீரர்கள் பஸ்ஸில் ஏறி சோதனையை முடித்தனர். வெளியே நின்ற இதர பயணிகளின் அடையாள அட்டைகள் உடைமைகள் சோதனையிடப்பட்டன. யாவும் சுமுகமாக முடிந்ததும் பஸ் புறப்படுவதற்கு அனுமதி தரப் பட்டது.

சாரதி பஸ்ஸை மீண்டும் ஸ்டார்ட் செய்தபோது, ஒரு இராணுவ வீரர் முகாமிலிருந்து வேகமாக ஓடி வந்தார். அவரது முதுகில் துப்பாக்கி. பஸ்ஸை நிறுத்துமாறு சத்தமிட்டுக்கொண்டே வந்தார். நாம் திகைத்துப்போனோம்.

வந்தவரின் கையில் ஒரு சிறிய திராட்சைக்குலை காணப்பட்டது.

அந்த பஸ்ஸிற்கு வெளியே நின்றுகொண்டே யன்னலூடாக ஒரு குழந்தைக்கு அதனைக் கொடுத்தார். தமிழ்க்குழந்தை பயத்தினால் வாங்க மறுத்தது. பின்னர் குழந்தையின் தாய் வாங்கிக்கொள்ளுமாறு சொன்னதும் குழந்தை திராட்சையை பெற்றுக்கொண்டது.

அந்த இராணுவ வீரரின் கண்களைப் பார்த்தேன். கனிவுநிறைந்த அந்தக்கண்கள் ஒருகணம் மின்னியது. பஸ் புறப்பட்டது.

> **மனிதாபிமானம் எப்படி உளவியல் சார்ந்ததோ அப்படியே கருணை, பயம், வெறுப்பு, கோபம், பழிவாங்கல் உட்பட பல வேண்டத்தகாத குணங்களும் உளவியல் சாரந்ததே.**

குழந்தை தாயிடம் கேட்கிறது: 'அம்மா அந்த ஆமிக்காரர் எனக்கு ஏன் இதைத் தந்தார்?'

தாய் சொல்கிறாள்: 'அந்த ஆமிக்காரனுக்கு ஊரில உன்னைப்போல் ஒரு குழந்தை இருக்கலாம்.'

இந்த உண்மைச்சம்பவத்தை பத்திரிகையிலும் எழுதினேன். பல. வருடங்களின் பின்னர் அவுஸ்ரேலியா வானொலி ஒன்றிலும் தெரிவித்திருக்கின்றேன்.

மேலே குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களும் எம்மை நெகிழச்செய்யலாம்.

அதற்காக, அந்த ஆமிக்காரர்களைப்போன்று எல்லா ஆமிக்காரர்களும் இருந்திருப்பின் தமிழினப் பேரழிவு ஏற்பட்டிருக்குமா? என்று ஆதங்கப்படலாம். ஆனால் விவாதிக்க முடியுமா?

மனிதாபிமானம் எப்படி உளவியல் சார்ந்ததோ அப்படியே கருணை, பயம், வெறுப்பு, கோபம், பழிவாங்கல் உட்பட பல வேண்டத்தகாத குணங்களும் உளவியல் சாரந்ததே.

இலங்கையில் எனது கண்களை தாய்ப்பால் இட்டு சுகப்படுத்தியவர் ஒரு சிங்களப்பெண்.

கவிஞர் கண்ணதாசன் கர்ணன் திரைப்படத்திற்காக எழுதியிருந்த பாடல் வரிதான் நினைவுக்கு வருகிறது. கண்ணுக்கு குலம் ஏது? கருணைக்கு இனம் ஏது?


# மாதகல் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தோரூடாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு வருகை தந்த மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.



அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், பிரதேச செயலர் முரளிதரனை தலைவராகவும், கடற்றொழில் பரிசோதகர் ஜெயசீலனை செயலாளராகவும் கொண்ட குழுவொன்றை அமைத்து தொழிலாளர்களது பிரச்சினைகள் தொடரபில் ஆராயவுள்ளதுடன், துறை சார்ந்தோரூடாக விரைவில் உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமெனவும் தெரிவித்தார்.

இதற்காக குறைந்தது ஒரு மாதகால அவகாசம் தேவை எனவும் அதுவரையில் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இதனூடாக கிடைக்கப்பெறும் உதவித்திட்டங்களைப் பெறமுடியும் எனவும் இதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள மாவட்டப் பரிசோதகர் ரமேஷ கண்ணா, கடற்றொழில் பரிசோதகர் ஜெயசீலன், ஈ.பி.டி.பி மானிப்பாய் அமைப்பாளர் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடமாகாணத்தின் கல்வி வீழ்ச்சியடையும் அபாயம்

## – இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின்கல்வியைத்திட்டமிட்டு அழிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமாகாண தாய்ச்சங்க, பிரதேச, பிராந்திய செயலாளர்கள் கலந்து கொண்ட அவசர ஒன்று கூடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் கல்வியில் ஏற்பட்டுள்ள பல்வேறுவிதமான நெருக்கடிகள் குறித்து அவசர ஒன்று கூடல் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தத் தமது பிரதேசம்சார்ந்த பல்வேறு குறைபாடுகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

அவர்கள் குறைபாடுகள் குறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண கல்வி அமைச்சு துறைசார்ந்த எவருடனும் கலந்தாலோசிக்காமல்எடுக்கின்ற முடிவுகளால் மாகாணத்தினுடைய கல்வி மேலும் வீழ்ச்சி அடையும் என அதிர்ச்சி வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே வடமாகாணம் இலங்கையில் கடைசி இடத்தில் உள்ளது. இதனை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொள்ளாத அதிகாரிகள் பய உணர்வோடு யார் அதிகாரத்தில் பெரியவரோ அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பொருத்தமில்லாத செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிப்பது ஒட்டுமொத்தமாக வடமாகாணத்தின் கல்வியை அழிக்கும் செயலாகும்.

இலங்கையிலேயே முன்னிலை வகித்த வடமாகாணம் சமாதான, சாதகமான சூழ்நிலைக்குப் பின்னர் பின்தள்ளப்படுவது வேதனைதருகின்ற விடயம் என்பதனைவிட எல்லோரும் விழிப்படைய வேண்டிய விடயமாகும். மாணவர்களின் துர்நடத்தைகள், அவர்களின் நிறைவேற்றப்படாத பல அத்தியாவசிய தேவைகள், கல்வி அதிகாரிகள் மீது கொள்கின்ற காழ்ப்புணர்வுகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மீது செலுத்துகின்ற அதிகார துஷ்பிரயோகங்கள், குற்றவாளிகள் என இணங்காண முன்னர் தண்டனை வழங்குதல், தண்டனை வழங்க வேண்டியவர்களுக்கு பதவியுயர்வுகளை வழங்குதல் சுயமான கற்றல் கற்பித்தலுக்கு இடையூறாக இருத்தல், அதிபர் ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைத் தாமதப்படுத்துதல், தடுத்தல், விருப்பமானவர்கள், விரும்பமில்லாதவர்கள் என பாகுபடுத்துதல், கண்ணியத்துடன் நடந்துகொள்ளும் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களை வயது அனுபவ வேறுபாடின்றி வஞ்சித்தல்.

அதிபர்கள் ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை உரியகாலங்களில் வழங்காது தாமதப்படுத்துதல், தமக்கு வேண்டிய வகையில் பாடசாலைகளை வகைப்படுத்துதல், இவற்றைவிட இன்னும் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய செயலாளர்கள் இவை. அனைத்தும் வடமாகாண கல்வி அமைச்சின் குறைபாடுகளா? அல்லது திட்டமிடப்பட்ட செயல்களா? எனவும் கேள்வி எழுப்பி இதனால் எதிர்வரும் காலங்களில் இதன் தாக்கங்கள் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றன.' எனவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இனிமேலும் கரிசனைகொள்ளாதிருக்க முடியாதென்று ஏகமனதாகத் தீர்மானித்து, வடமாகாண கல்வி அமைச்சுக்கு எதிராக தொழிற் சங்க ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

# மாணவனின் நெறியாள்கையில் “மாறவேண்டும் மனங்கள்” நாடகம்

(சாந்தன்-சிகரம்)

கிளிநொச்சி விநாயகபுரத்திலுள்ள கலைத்தாய் மன்றத்தின் ஏற்பாட்டில் 'மாறவேண்டும் மனங்கள்' என்ற தொனிப்பொருளிலான நாடகத்தினை 19 வயதுடைய மாணவன் ஒருவன் சிறந்த முறையில் நெறியாள்கை செய்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளான்.





சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள், அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டு தமது வாழ்க்கையினை சிறந்த முறையில் கொண்டு செல்வது என்பதை விளக்கும் முகமாக இந்த நாடகம் அமைந்துள்ளது.

16 சிறுவர்கள் நடித்திருந்த இந்த நாடகத்திற்கான கதை, பாடல் அமைப்பு, இசை, நாடக நெறியாள்கை அனைத்தையும் இந்த மாணவனே செய்துள்ளான்.

சிறுவனாக இருந்த போது குழப்படிகாரனாக இருந்த இந்தச் சிறுவன் சாதாரண ஒரு நடிகனாக இருந்து பின்னர் தற்போது ஒரு நாடகத்தை நெறியாள்கை செய்யும் அளவிற்கு வளர்ந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக ஆசிரியரும், கிராமிய உழைப்பாளர் அமைப்பைச் சேர்ந்தவருமான எஸ்.பாலசிங்கம் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி -விநாயகபுரம் விநாயகர் ஆலயத்தில் முதன்முதலாக அரகேற்றப்பட்ட 'மாறவேண்டும் மனங்கள்' என்ற இந்த நாடகம், சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டதுடன், கிராமிய உழைப்பாளர்அமைப்பின் ஏற்பாட்டில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்ற களப்பயிற்சியின் போதும் அரங்கேற்றப்பட்டது. 'மாறவேண்டும் மனங்கள்' என்ற இந்த நாடகம் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுர்வேதம்

## குளிர்ச்சியும் வாயுவும்!

வாத தோஷத்தின் சேர்க்கை இல்லாமல் உடலில் வலி ஏற்படுவதில்லை என்று ஆயுர்வேதம் கூறுகிறது. அதிகமாக வேலை செய்வதால் சிலருக்கு வலி ஏற்படும். வாதம் பிற தோஷங்களால் தடுக்கப்படாமல் தன் தனி சுதந்திரமான சீற்றத்தினால் ஏற்படும் இந்த வகை வலிக்கு 'கேவலவாயு கோபம்' என்று பெயர். நாற்காலியில் சிறிது நேரம் அமர்ந்திருந்து எழும்போதோ, படுத்து உறங்கிவிட்டு எழும்போதோ சிலருக்கு வலி ஏற்படும். நகரும் தன்மையுடைய வாயுவை மற்ற தோஷங்கள் சூழ்ந்து கொள்வதால் அதன் இயல்பான தன்மைக்கு ஏற்படும் தடையினால் ஏற்படும் வலியானது ஆவரண வாயு என்று பெயர் பெறுகிறது.

ஆவரண வாயு ஏற்படக் காரணமென்ன? படுக்கும் படுக்கை விரிப்பு சில்லிட்டிருந்து அதன் மேல் வெற்றுடம்பாகப் படுப்பதாலும், குளிரூட்டப்பட்ட அறையில் உடலைக் கம்பளியால் போர்த்திக் கொள்ளாமல் படுப்பதாலும், குளிர்ந்த நீரைப் பருகிய பிறகு இரவில் படுத்தாலோ, குளிர்ச்சியான உணவையும் பானத்தையும் பருகிய பிறகு படுப்பதாலோ, இரவில் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டுப் படுப்பதாலோ, இந்த ஆவரண வாயுவின் உபாதை ஏற்படக் கூடும். அதாவது குளிர் காரணத்தால் ஏற்படும் வலி.

"ஸ்தம்பனம்' அதாவது விறைத்துக் கொள்ளும் உடல் நிலையை இதுபோன்ற காரணங்கள் ஏற்படுத்துவதால், வாயுவின் கதி முடக்கம் ஏற்பட்டு தசையிலும், மூட்டுகளிலும் வலியை ஏற்படுத்துகிறது. குளிர்ச்சியான ஸ்தம்பனம் எனும் விறைப்புத் தன்மைக்கு நேர் எதிரான சூட்டைத் தரும் "ஸ்வேதனம்' அதாவது வியர்வையை வரவழைக்கும் சிகிச்சை முறையினால் – ஆவரணம் எனும் சூழலிருந்து வாயுவை விடுபடச் செய்யும் சிகிச்சை முறையால் – நிவாரணம் ஏற்படலாம்.

"நாடீஸ்வேதம்' என்று ஒரு சிகிச்சைமுறை இருக்கிறது. ஆமணக்கு, சித்தாமுட்டி, கல்யாண முருங்கை, யூகலிப்டஸ், புங்கன், நொச்சி, எருக்கு போன்றவற்றின் இலைகளை தண்ணீரில் போட்டு பிரஷர் குக்கரில் வேக வைத்து, குக்கரின் மூடியின் மேலுள்ள குழாயில் ஒரு ரப்பர் டியூபை மாட்டி அதன் மூலம் வெளிப்படும் நீராவியை உங்களுடைய முதுகுத் தண்டுவடப் பகுதியை கற்பூராதி தைலம், நாராயண தைலம், ஸஹசராதி தைலம் போன்றவற்றில் ஒன்றை இளஞ்சூடாகப் பூசிய பிறகு, காட்டுவதின் மூலம் வாயு தடை நீங்கப் பெற்று, சுதந்திரம் அடைந்து விடுவதால், வலி குறைந்து குணமாக வாய்ப்பிருக்கிறது. இதற்கு மாற்று சிகிச்சையாக ஆற்று மணலை மூட்டை கட்டி சூடாக்கி, ஒத்தடம் கொடுப்பதையும் செய்யலாம். வாயுவுக்கு ஏற்படும் இந்த விடுதலையுடன் பிரச்சினை ஓய்ந்துவிட்டதாக நாம் கருத முடியாது. அதன் பாதைக்குத் தடை ஏற்படுத்திய தோஷ – தாது – மலங்கள், மறுபடியும் காரணத்தை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருப்பதால், அதற்கு வழி ஏற்படாத வகையில் நீங்கள் உணவை வெதுவெதுப்பாகச் சாப்பிடுவதும், சூடான வீரியம் கொண்ட பூண்டு, மிளகு, சீரகம், பெருங்காயம், ஓமம் போன்றவற்றின் துணை கொண்டு தயாரிக்கப்பட்ட இரசம் மற்றும் குழம்பு போன்றவை உணவாக ஏற்கப்பட வேண்டும்.

உடலுக்கு எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளித்து வரலாம். இருமாதங்களுக்கு ஒருமுறை 15 மி.லி. சுத்தமான விளக்கெண்ணெயைச் சூடான பாலுடன் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுக் குடல் வாயுவை நீக்கிக் கொள்ளலாம், பேதி மூலமாக. சீரகம், ஓமம் போட்டுக் காய்ச்சிய வெந்நீரையே பருக வேண்டும். அஷ்ட வர்க்கம் எனும் ஆயுர்வேத கஷாய மருந்தை 15 மி.லீ. எடுத்து 60 மி.லீ. வெதுவெதுப்பான தண்ணீர் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சுமார் 48 நாட்கள் குடிக்க வேண்டும். வலி பறந்துவிடும்.

- எஸ். சுவாமிநாதன்

# புதுவகையில் சிந்திக்க வேண்டிய மாற்றுத்திறனாளிகள் இலக்கியம்

## தமிழ்நேசன் அடிகளார்



(மன்னார்)

இலக்கியத்தில் பல வகையான இலக்கியங்கள் பற்றிப் பேசுகின்றோம். சிறுவர் இலக்கியம், தலித் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இன்று நாம் இன்னுமொரு தனித்துவமான புதுவகை இலக்கியம் பற்றியும் சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம். அது தான் "மாற்றுத்திறனாளிகள் இலக்கியம்" ஆகும் என மன்னார் கலையருவியின் இயக்குனர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மன்னார் தோட்டவெளியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளியான பெனிலின் "வலியின் விம்பங்கள்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ் நேசன் அடிகளார் தொடர்ந்து உரையாற்றும்போது; பெனிலின் பெரும் பாலான கவிதைகள் அவருடைய வலியின் வெளிப்பாடுக ளாகவே உள்ளன. விப்த்தில் சிக்கி நெஞ்சுப் பகுதிக்குக் கீழே செயல் இழந்துள்ள இவர் சக்கர நாற்காலியிலேயேதன் வாழ்வை நகர்த்துகின்றார். அவருடைய கவிதைகளில் ஒரு மாற்றுத் திறனாளியின் மன நிலை எப்படி இருக்கும் என் பதைத் தரிசிக்க முடிகிறது.

முன்னர் பயன்பாட்டில் இருந்துவந்த "வலது குறைந்தோர்," "அங்கவீனர்" "ஊனமுற்றோர்" போன்ற சொற்பிரயோகங்கள் இப்போது வழங்கப்படுவதில்லை. மாறாக "மாற்றுத் திறனாளிகள்," "மாற்றாற்றல் உள்ளோர்" போன்ற சொற்பதங்களே பாவிக்கப்படுகின்றன. இச்சொற்பதங்கள் அவர்களைப் பற்றி அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. அதேவேளை அவர்களைப் பற்றிய மற்றவர்களின் மனப்பான்மையிலும் மாற்றத்தைக் கொண்டுவருகின்றது.

போர்க்காலத்திலும் சரி, போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் சரி கண் பார்வையிழந்தவர்கள், கை கால்களை இழந்தவர்கள், இன்னும் மாறாத காயங்களோடு வலிகளோடு வாழ்பவர்கள் என பல மாற்றுத் திறனாளிகள் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவர்களின் இலக்கியங்கள் தனியான வகையாக நோக்கப்படவேண்டும். அவை தனித்துவமான ஆய்வுக்குரியவையாகக் கருதப்படவேண்டும். இலக்கிய ஆய்வாளர்கள் எதிர்காலத்தில் இந்த விடயத்தில் தமது அக்கறையை, கரிசனையைச் செலுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# சிறுவர், முதியோர் தின விழா

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், செல்லமுத்து ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக சிறுவர் நிதியத்தின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் எஸ். மணிவண்ணன், மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே. தபேந்திரன், மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி மு.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


இவ் விழாவில் இவ் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியைப் பெற்ற பச்சிலைப்பள்ளி பிரதேச மாணவர்களுக்கான பரிசளிப்பு, சிறுவர், முதியோர் கௌரவிப்பு, பேச்சு, கவிதை எனும் நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

# வெப்பத்தால் பயிர்கள் நாசம்

(அச்சுவேலி)

அண்மையில் யாழ்குடாநாட்டின் பல பகுதிகளிலும் கொட்டித் தீர்த்த கடும் மழையினைத் தொடர்ந்து பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தொடரும் கடும் வெப்பம் காரணமாக மிகவும் கவலையடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. வலிகாமம் கிழக்கு மற்றும் வடமராட்சிப் பகுதி விவசாயிகள் அண்மையில் பெய்த மழையினைத் தொடந்து வயல் நிலங்களைப் பண்படுத்தி அவற்றில் நெற்செய்கையினை ஆரம்பித்தனர். எனினும் விதைத்த நெல் முளைத்துப் பயிராகியுள்ள நிலையில் வெப்பம் காரணமாக பயிர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இவ்வாறு தொடர்ந்தும் மழை இன்றி வெப்பம் அதிகரிக்கு மாயின் பயிர்கள் அழிந்து நாசமாகி விடும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (03)

# பரமர் சங்கமம்



'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?' இப்படித்தான் புத்திஜீவிகள் என்று கணிக்கப்படுகின்ற பேராசிரியர்கள் ஆரம்பத்தில் அ.ஆ.என்றுதான் படித்து முன்னேறுகிறார்கள்.

முன்பள்ளி, பாடசாலை, கல்லூரி, உயர்கலைக்கல்லூரி, பல்கலைக்கழக மட்டங்களை எட்டிப் பிடிக்கின்ற வரையில் முன்னேறி விரிவுரையாளர், கலாநிதி, பேராசிரியர் மட்டங்களை எட்டும் வரையில் அவர்களுடைய சிந்தனா சக்தி புத்திஜீவிகளாக வளர்த்தெடுக்கின்றன.

அதனிடையே அவர்களால் எழுதப்படும் நூல்கள், ஆற்றப்படும் உரைகள், வழங்கப்படும் நேர்காணல்களில் வெளிவருகின்ற ஆளுமைத்திறன் ஏனையவர்களின் மத்தியில் எதிர்பார்ப்புக்குரியவராகவும், சிறந்த சிந்தனையாளராாகவும் நோக்க வைக்கின்றது.

அதறகப்பால் சிந்தனைகளின் வளர்ச்சியானது 'கடும்கூர் மொட்டை' அல்லது 'அதிகம் படிச்ச பல்லி கூழ்ப்பானையில் வீழ்வது போல' 'குமர் முத்திக் குரங்காவதாக' வந்து விடுவதைப் பரவலாகப் பார்க்க நேர்கிறது.

இந்த நிலை மாக்ஸ்சிய வாதி என வடபகுதியில் ஒருகாலத்தில் கொடிகட்டடிப்பறந்த அரசியல் வாதியான 'வி.பி' என மக்களால் அழைக்கப்பட்ட தோழர் வி.பொன்னம்பலம் பிற்காலத்தில் அரசியல் தடத்தில் பிற்போக்கு, திரிபுவாதிகள் என்று அவராலே வர்ணிக்கப்பட்டவர்களுடன கூட்டுச் சேர்ந்ததால் சம்பாதித்துக் கொண்டதையும் இந்த மண் கண்டிருக்கிறது.

அந்த வரிசையில் தென்பகுதியைச் சேர்ந்த என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கா என்று எண்ணிக்கை நீளும்.

முஸ்லிம்களிடையே சிறந்த சிந்தனா வாதியும், கவிஞருமாகத் திகழ்ந்த தலைசிறந்த விமர்சகர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் சமீ பத்தில் 'காலச்சுவடு' இதழுக்கு வழங்கிய நேர்காணலில் தமிழ் பேசும் இனம் என்ற வரம்புக்குள் ஈழத்து முஸ்லிம்மற்றும் மலையகத் தமிழர்கள் உட்பட மாட்டார்கள் என்று சொல்வதன் மூலம் அவரது தற்போதைய நிலைப்பாடு புத்தி ஜீவிகள் மட்டத்தில் கேள்விக் குறியை ஏற்படுத்தி உள்ளது.

மனித சமுதாயத்தில் தோன்றும் பல்வேறு சிந்தனைகளை ஓரடிப் படையில் நெறிப்படுத்தி ஒழுங்காக வளத்தெடுக்கும் ஆரோக்கியமான எண்ணங்களை சொல்லாமல் எதார்த்தமாக காணப்படும் மக்களின் பல்வேறு கூறுகளையும். அவர்களிடையே ஏற்பட்டுள்ள வெடிப்புகளை, யும் பெரிது படுத்திக் கருத்துத் தெரிவித்து இருப்பதானது இவரும் "குமர் முத்திக் குரங்கான" புத்தி ஜீவியாகி விட்டதை உணர்த்துகிறதல்லவா?

விஞ்ஞான சோசலிச சிந்தனைப்போக்கில் எதார்த்தங்களை எடுத்துக் கூறுவதில் பிழைஇருக்காதெனினும் அவற்றுக்கான தீர்வினை சொல்லாமல் விட்டு விடுவது அந்தப் பிளவுகளைப் பெரிதாக்க உதவுமேயன்றி சமூக விடிவுக்கு ஒரு சிறங்கை அளவும் உதவாதென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனியல்லவா என்ன நான் சொல்லுறே...

# உண்டியல் பெட்டி கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கென ஏ-9 வீதியில் வைக்கப்பட்டுள்ள உண்டியல் பெட்டி காணாமற போன நிலையில் மாங்குளம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்படி உண்டியல் பெட்டி காணாமல் போன நிலையில் மாங்குளம் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில் இந்த உண்டியல் பெட்டி கொக்காவிலை அண்டிய காட்டுப பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. களவாடிய நபர்களைக் கைது செய்யும் வகையில் மாங்குளம் பொலிஸார் அவர்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப் பட் டுள்ளது. (77)

# ஆசிரியர் தினம்

(ஆனைக்கோட்டை)

நவாலி முருகானந்தா முன்பள்ளியின் ஆசிரியர் தினம் நேற்று முன்தினம் முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் முருகானந்தா முன்பள்ளியின் சனசமூக நிலையத் தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள் முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து மாலைகள் சகிதம் மாணவர்களால் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி கிழக்கு கிராம அலுவலர் ரி.நித்தியானந்தன் கலந்து கொண்டார்.

இதில் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (104)

# முரசின் இன்றைய பலன்

(10.10.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி.
நட்சத்திரம்: பூசம் முற்பகல் 11.10 வரை. பின் ஆயிலியம்.
சித்தயோகம் - தசமி முன்னிரவு 11.40 வரை.
இராகுகாலம் 12.02 - 1.32 வரை. சுபநேரம் 4.32 - 6.02 வரை
எமகண்டம் 07.32 - 9.02 வரை. குளிகன் காலம் 10.32 - 12.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | எதிர்பாராத பணவரவு. உறவினர், நண்பர்களுக்கு உதவி. அரச அனுகூலம். வழக்கு சாதகம். தொழிலில் அனுபவமிக்கோர் உதவி. தொட்டது துலங்கும் வெற்றிகள் வந்துசேரும். |
| ரிஷபம்  | எதிர்ப்புகள் தாண்டி முன்னேறுவீர்கள். மருத்துவ செலவு. வெளியூர் பயண அலைச்சல் இருந்தாலும் ஆதாயம். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். |
| மிதுனம்  | வேலைகள் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவி. தாயாரில் கவனம். ஆடை, ஆபரணம் சேரும். புது ஒப்பந்தங்கள். இலாபம் பெருகும். திறமைகள் வெளிப்படும் நாள். |
| கடகம்  | பிள்ளைகளால் நன்மை. கோயில் வழிபாடு. வீடு, வாகன திருத்தம். தொழில் செழிக்கும். விருந்துபசரிப்பு. வெளியூர் நற்செய்தி. சமூகத்தில் மதிப்பு. சாதித்துக் காட்டும் நாள். |
| சிம்மம்  | வேலைசுமையால் பதற்றம். மறதியால் பிரச்சினை. விட்டுக் கொடுப்பீர்கள். இனிமையான பேச்சு. குடும்பத்தில் ஒற்றுமை. பணம், நகை சேரும். சுற்றுலா, களிப்பு கூடும் நாள். |
| கன்னி  | நீண்ட நாள் ஆசை நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசை. எதிர்காலம் குறித்து ஆலோசனை. தொழிலில் புதுமாற்றம். நிர்வாகத் திறமை, சிந்தனைத் திறன் பெருகும் நாள். |
| துலாம்  | மனஉளைச்சல் நீங்கி தெளிவு. குடும்பத்தில் அமைதி. வராது என்று இருந்த பணம் வரும். உறவினர்களிடம் உதவி. திடீர் இலாபம். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள். |
| விருச்சிகம்  | எதிர்காலம் பற்றிய கவலை. பிள்ளைகள் போக்கில் பயம். வரவுக்கு மிஞ்சிய செலவு. கணிசமான இலாபம். போராடி பணிகள் முடிப்பீர். பயணத்தில் கவனம். திட்டமிட்ட செயற்பாடு. |
| தனுசு  | துணிச்சலான முடிவுகள். உடன்பிறந்தவர்கள் பக்க பலம். உங்களால் மற்றவர் ஆதாயம். வரவு உயரும். புதிய நட்பு பலமடையும். குடும்பத்தேவை நிறைவேறும். வெற்றி நாள். |
| மகரம்  | புதிய சிந்தனைகள். பிள்ளைகளின் முன்னேற்றம். நல்லவர்களை கண்டறிவீர்கள். திடீர் இலாபம். சலுகைகள் கிடைக்கும். உடல் பலம் பெறும். தன்னம்பிக்கை துளிர்விடும். |
| கும்பம்  | கணவன்- மனைவி புகைச்சல் நீங்கும். பணவரவு திருப்தி. புதிய நட்பு வரும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு. உழைப்பில் ஊக்கம். புது வாய்ப்புகள். புத்துணர்ச்சி பெருகும். |
| மீனம்  | ஆசையால் தேவையற்ற அலைச்சல். கணவன்-மனைவி பிரச்சினை வந்து நீங்கும். தொழிலில் தடங்கல் வரும். தேவையற்ற செலவுகள். எதிர்பார்ப்புகள் முடிய தாமதம். |

**09) பின்வரும் உரைப் பகுதியை வாசித்து விடை தருக**

கரும்பு என்ற பெயரைக் கேட்டவுடன் அனைவர் வாயிலும் இனிப்பூறும். கரும்புச் சாற்றை வடித்துக் காய்ச்சி சர்க்கரை, வெல்லம், கற்கண்டு முதலியன தயாரிக்கப்படுகின்றன. கரும்பில் தண்டு, இலை, பூ ஆகிய பகுதிகள் உண்டு. தண்டுதான் தன்னுள் சாற்றை வைத்திருக்கின்றது. கரும்புக்கு வேழம், கழை, கன்னல் முதலான பெயர்கள் உண்டு. செங்கரும்பு, குச்சிக்கரும்பு, நாமக் கரும்பு, வெண்கரும்பு, பேய்க்கரும்பு, பூவண் கரும்பு எனப் பல வகைகள் கரும்பில் உண்டு.

**1) எதன் பெயரைக் கேட்டவுடன் அனைவர் வாயிலும் இனிப்பூறும்**

..............................................................................................

**2) கருப்பஞ் சாற்றில் செய்யப்படும் பொருட்கள் எவை?**

..............................................................................................

**3) கரும்பின் பகுதிகள் எவை?**

..............................................................................................

**4) கரும்பு என்ற பெயரைக் கேட்டால் அனைவர் வாயிலும் என்ன ஊறும்?**

..............................................................................................

**5) கரும்பிற்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?**

..............................................................................................

**10) இளமைப் பெயர்களைத் தருக**

1) மிளகாய் : ..................................

2) கமுகு : ..................................

3) குரங்கு : ..................................

4) யானை : ..................................

5) சிங்கம் : ..................................

**11) 'எனது அம்மா' எனும் தலைப்பில் ஐந்து வசனங்கள் எழுதுக**

1) ..............................................................................................

2) ..............................................................................................

3) ..............................................................................................

4) ..............................................................................................

5) ..............................................................................................



# தரம் 2 - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) பின்வரும் பாடலை வாசித்து விடை எழுதுங்கள்**

மாமரத்தின் கொப்பிலே - குருவி
கூடுகட்டி இருந்தது!
கூட்டின் உள்ளே - முட்டைகள்
நான்கை இட்டு வைத்தது!
நாட்கள் கழிந்து - கூட்டிலே
நாலுகுஞ்சு பொரித்தது
மஞ்சள், கறுப்பு - நிறத்திலே
மாம்பழத்தான் குஞ்சுகள்!
இறக்கை மெல்ல - வளர்ந்ததும்
உலகை பார்க்க பறந்தன!

1) பாடலில் வந்துள்ள வெள்ளை என்பதற்குரிய எதிர்ச்சொல் எது? ..............................

2) எத்தனை குஞ்சுகள் பொரித்தன? ..............................

3) எங்கு குருவி கூடுகட்டியது? ..............................

4) என்ன நிறக்குஞ்சுகள் பொரித்தன? ..............................

5) முட்டைகள் என்பதன் நீண்டு ஒலிக்கும் சொல்லை எழுதுங்கள்?..............................

**02) குறுக்கெழுத்துப் புதிரை தரப்படும் துப்புக்களைப் பயன்படுத்தி நிரப்புங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 நா | | 2 க | |
| | ம | | |
| 3 ப | | | |
| 4 | | | |

**மேலிருந்து கீழ்**

1) நான்கு தரம் பத்து

2) இனிக்கும் தடி

**இடமிருந்து வலம்**

1) மேடையில் நடிப்பது

3) பாடம் என்பதன் குறுகி ஒலிக்கும் சொல்

4) தேங்காய் மட்டையில் இருந்து பெறுவது.

03) எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள சொற்கள் ஆக்குங்கள்

1) ரு / ம் / க / பு : ..............................
2) ம் / வி / ஓ / ய : ..............................
3) வி / உ / த : ..............................
4) வு/ நி / ல : ..............................
5) ல் / ண / ம : ..............................
6) ரை/ தா /ம : ..............................
7) ம் /ஆ /கா/ ய : ..............................
8) லை / சா/ பா / ட : ..............................

04) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குங்கள்

1) வீசியது / பூ / மணம் : ..............................
2) நீரில் / தவளை / பாய்ந்தது : ..............................
3) நாய் / சிறுவனை / துரத்தியது : ..............................
4) வசிக்கும் / யானை / காட்டில் : ..............................
5) மயில் / பறவை / அழகான : ..............................

05) எதிர்ச் சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்

| | |
|---|---|
| பகல், | உறவு |
| காய், | மாரி |
| வாழ்வு, | கனவு |

1) மாரி கோடை
2) .............. ..............
3) .............. ..............
4) .............. ..............
5) .............. ..............

| | |
|---|---|
| சாவு, | கோடை |
| நனவு, | பகை |
| இரவு, | பழம் |



06) பின்வரும் பிழைகளைத் திருத்தி எழுதுக

1) வெத்திலை : ..............................
2) உலவர்கல் : ..............................
3) வாணொளி : ..............................
4) களப்பதில்ளை : ..............................
5) கெஞ்சி அலைத்தான் : ..............................

07) எதிர்ச்சொல் தருக

1) அன்பு : ..............................
2) கிழக்கு : ..............................
3) பிறப்பு : ..............................
4) வீரன் : ..............................
5) வலம் : ..............................


08) படத்தினை அவதானித்து ஐந்து வசனம் எழுதுக



1) ..............................
2) ..............................
3) ..............................
4) ..............................
5) ..............................

# 5 வீதத்தைவிடக் குறைவடையும் இந்திய பொருளாதார வளர்ச்சி

## ஐ.எம்.எவ் தெரிவிப்பு



(நியூயோர்க்)

இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சத வீதத்துக்கும் குறைவாகவே இருக்கும் என்று சர்வதேச பொருளாதார நிதியம் (International Monetary Fund) கணித்துள்ளது.

2011ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.8 சதவீதமாக இருந்தது. ஆனால், மானியங்களை அதிகரித்து, கடன் அளவை இந்தியா அதிகரித்துக் கொண்டது. மேலும் அரசியல் நெருக்கடி, கூட்டணிக் கட்சிகளின் நெருக்கடியால் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை அமுலாக்காமல் தாமதம் செய்ததால் முதலீடுகளும் குறைந்துவிட்டன.

மேலும் அடுத்தடுத்து வெளிச்சத்துக்கு வந்த ஸ்பெக்ட்ரம், நிலக்கரி ஊழல்கள், பெரும் மின்சாரப் பற்றாக்குறை, வரித் துறை சீர்திருத்தங்களில் தொய்வு ஆகியவையும் அன்னிய முதலீட்டாளர்களைக் கவலையடையச் செய்துவிட்டன. இதனால் இந்தியாவுக்கு போதிய முதலீடுகள் வரவில்லை.

இதனால் இப்போது இந்தியாவின் வளர்ச்சி 5.5 சதவீதமாகவே உள்ளது. இந்த நிலைமை மேலும் மோசமாகும். மொத்தத்தில் இந்த ஆண்டு நாட்டின் வளர்ச்சி விகிதம் 4.9 சதவீதமாகவே இருக்கும் என்று ஐ.எம்.எப் கூறியுள்ளது.


அதே நேரத்தில் இப்போது வரும் சில்லறை வணிகம், காப்பீட்டுத்துறை, ஓய்வூதியத் துறை, விமானத்துறைகளில் அன்னிய முதலீட்டை இந்தியா அனுமதிக்க ஆரம்பித்து அதற்கான பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. மேலும் பெருமளவு மானியத்தை சாப்பிடும் சமையல் எரிவாயு, டீசல் ஆகியவற்றின் விலையை உயர்த்தி அரசின் செலவை இந்தியா குறைத்துள்ளது.

இதனால் 2013ஆம் ஆண்டில், அதாவது அடுத்த ஆண்டில், இதற்கான பலன்களை இந்தியா பெறும் என்றும் ஐ.எம்.எப் கூறியுள்ளது.

இப்போதுள்ள நிலையில் இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் (GDP) 3.8 சதவீதமாக அதிகரிக்கவுள்ளது என்றும் அறிவித்துள்ளது




# கர்நாடக மறுபரிசீலனை பிரதமர் நிராகரிப்பு




காவிரியில் இருந்து தமிழகத்துக்கு நாள்தோறும் விநாடிக்கு 9,000 கன அடி தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கர்நாடகத்தின் கோரிக்கையை, காவிரி ஆணையத்தின் தலைவர் பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்து விட்டார்.

இந்த விவகாரத்தில் காவிரி கண்காணிப்புக் குழு எடுக்கும் முடிவின் அடிப்படையில் ஒக்டோபர் 15ஆம் திகதிக்குப் பிறகு தமிழகத்துக்கு திறந்து விடும் நீரின் அளவை காவிரி நதிநீர் ஆணையம் தீர்மானிக்கும் என்று பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக காங்கிரஸ், பா.ஜ.க. தலைவர்கள் பிரதமரை சந்தித்து, தமிழகத்துக்கு நீர் திறந்துவிடும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அப்போது, கடந்த 19ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்றும் பிரதமர் தெரிவித்து விட்டதாக அவரது அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன

# பிரியங்கா வாங்கிக் குவித்த சொத்து விசாரணை நடத்தக் கோரும் பா.ஜ.க



சோனியா காந்தியின் மருமகன் ராபர்ட் வத்ராவுக்கும் டி.எல்.எப். நிறுவனத்துக்கும் இடையேயான தொடர்பு ஒன்று தற்போது பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ள நிலையில், சோனியா காந்தியின் மகள் பிரியங்கா, இமாச்சலப் பிரதேசத்தில் வாங்கிக் குவித்துள்ள சொத்துகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி மற்றொரு இடியைத் தூக்கி காங்கிரஸ் தலையில் போட்டுள்ளது.

பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீத்தாராமன், "இமாச்சலப் பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது பிரியங்கா காந்திக்கு சர்ச்சைக்குரிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். வத்ரா மீதான ஊழல் புகாரில் விசாரணை இருக்காது என்று மத்திய அமைச்சர்கள் கூறியுள்ளனர். இந்த ஆட்சியில் நிறைய அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை" என்று கூறியிருக்கிறார்.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், இமாச்சலப் பிரதேசத்தில் தற்போது நடப்பது, பாரதீய ஜனதா ஆட்சி. பிரேம் குமார் துமால், பா.ஜ.க. சார்பில் முதல்வராக உள்ளார். அதாவது, மாநிலத்தில் நடைபெற்ற இந்த விவகாரத்தை சுலபமாக விசாரணை செய்யக்கூடிய மாநில அரசை தமது கையில் வைத்துக்கொண்டு, மத்திய அரசிடம் விசாரணை வேண்டும் என்று கோருகிறது பா.ஜ.க.

இங்கு காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது, 2003ஆம் ஆண்டில்! 2007ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றியீட்டி (68 இடங்களில், 41), ஆட்சி செய்கிறது. மாநிலத்துக்குள் எந்த நிலம் யாரிடம் உள்ளது என்பதை இவர்கள் சுலபமாக பார்க்கலாமே.

# கூடங்குள அணுஉலைப் போராட்டம் சோதனைகள் வந்தாலும் தொடரும்

(நெல்லை)

எத்தனை சோதனைகள் வந்தாலும் கூடங்குளம் அணுமின் நிலையப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலைய முற்றுகைப் போராட்டம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு முடிந்தது. அதன்பிறகு லூர்து மாதா ஆலய பந்தலுக்கு உதயகுமார் வந்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

முற்றுகைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது. 3 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் . இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழ்கத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டால் என்னவாகும் என்பது மத்திய, மாநில அரசுகளுக்குத் தெரியும். மக்களின் உணர்வுகளை மத்திய, மாநில அரசுகள் மதிக்க வேண்டும்.



மக்களின் முடிவுகளுக்குத் தான் அரசு அடி பணிய வேண்டும். எத்தனை சோதனைகள், அடக்குமுறைகள் வந்தாலும் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. வரலாற்றில் திருப்பு முனையாக கூடங்குளம் போராட்டம் அமையும்.

தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரியைச் சேர்ந்த சமுதாய தலைவர்களுடன் இடிந்தகரையில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. அப்போது அடுத்தகட்ட போராட்டம் குறித்து ஆலோசித்து அறிவிக்கப்படும் என்றார்.

# என்னை எதிர்த்துப் போட்டியிட பிரதமர் மன்மோகன் தயாரா?

## கேட்கிறார் மோடி



(அகமதாபாத்)

பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டதாகக் கூறிக் கொள்ளும் பிரதமர் மன்மோகன்சிங் தம்மை எதிர்த்து குஜராத் மாநில தேர்தலில் போட்டியிட தயாரா என்று அம்மாநில முதல்வர் நரேந்திர மோடி கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நரேந்திர மோடி பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மன்மோகன்சிங்குக்கு நான் சவால்விடுகிறேன் குஜராத் மாநில பேரவைத் தேர்தலில் என்னை எதிர்த்து அவரால் போட்டியிட முடியுமா? நீங்களும் சாலைகள் அமைத்தீர்கள்.. நானும் சாலைகளைப் போட்டிருக்கிறேன்.. நீங்கள் கால்வாய்களை உருவாக்கியிருக்கிறீர்கள்... நானும் அதைச் செய்திருக்கிறேன்.. இருவருமே மக்களுக்காக செய்திருக்கிறோம்.. வாருங்கள் இருவரும் போட்டியிடலாம்.. மக்கள் யாரை ஒப்புக் கொள்கிறார்கள் எனப் பார்த்துவிடலாம்..

டில்லிய்ய ஆளும் சுல்தான்களே! குஜராத் மீது நீங்கள் சவாரி செய்த காலம் மலையேறிவிட்டது. 100 நாட்களில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவோம் என்று ஆட்சிப் பொறுப்பேற்றபோது சோனியா காந்தி உறுதியளித்தார். ஆனால் நடந்ததா? இல்லையே! குஜராத்தில் தேர்தல் பிரசாரத்துக்கு வந்த சோனியா காந்தி, இந்த பணவீக்கம் பற்றி ஏன் எதுவுமே பேசவீல்லை.. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தவறியதற்காக சோனியா காந்தி நாட்டு மக்களிடத்தில் மன்னிப்பு கேட்டாக வேண்டும் என்றார் மோடி.

# திருமலை வெங்கடாசலபதி 90 நிமிடம் ஓய்வு பெறுகிறார்



(திருமலை)

திருமலை வெங்கடாசலபதி கோவில் நடையை நள்ளிரவு 1.30 மணியில் இருந்து 3 மணிவரை சாத்திவைக்க தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது. இதன்மூலம் அல்லும் பகலும் அயராது பக்தர்களுக்கு தரிசனம் தந்த பெருமாளுக்கு இனி ஒன்றரை மணிநேரம் ஓய்வு கிடைக்கும்.

கோவில் நடையை அடைக்காமல் இருப்பது ஆகம விதிகளுக்கு எதிரானது என, புகார் எழுந்தது. எந்நேரமும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு அனுமதிப்பதற்கு சில பண்டிதர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து, ஆலோசனை நடத்திய தேவஸ்தான நிர்வாகம், சில முடிவுகள் எடுத்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

வெங்கடாசலபதி கோவிலில், ஆகம விதிமுறைகளை இனி முழுமையாகப் பின்பற்றுவது என, முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி இனிமேல், தினமும் அதிகாலை, 1:30இற்கு கோவில் நடை சாத்தப்படும். இதன்பின், அதிகாலை, 3:00 மணிக்குத் தான், நடை திறக்கப்படும். தினமும், 90 நிமிடங்கள், கண்டிப்பாக கோவில் நடை சாத்தப்பட்டிருக்கும் எனத் தெரிவித்தனர்.

ஆண்டுதோறும் 1,700 கோடி ரூபாய் வருவாயை அள்ளித்தரும் பணக்கார தெய்வத்திற்கு இனி ஒன்றரை மணிநேரம் ஓய்வு கிடைக்கும். இதன்காரணமாக பக்தர்கள் தரிசனத்திற்காக காத்திருக்கும் நேரம் மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

# ஒரேநாளில் 11 பேருக்கு ஈராக்கில் தூக்குத்தண்டனை

(பாக்தாத்)

ஈராக்கில் அல்ஜீரியர் உள்ளிட்ட 11 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஈராக்கில் தீவிரவாதம் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 68 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி ஒரே நாளில் 21 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

இந்நிலையில், தீவிரவாத நடவடிக்கைளில் ஈடுபட்டதாக, 10 ஈராக்கியர்கள் மற்றும் அல்ஜீரியாவை சேர்ந்த ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவர்கள் மீதான வழக்கு பாக்தாத் நீதிமன்றத்தில் நடந்தது. விசாரணை முடிவில் 11 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு ஐ.நா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன், சர்வதேச மனித உரிமை அமைப்புகள், சர்வதேச பொது மன்னிப்பு கழகம் ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்தன. ஈராக் நீதிமன்றங்களில் வெளிப்படையான விசாரணை நடப்பதில்லை. பலருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நடைமுறையை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தின.

எனினும், 11 பேருக்கு நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து இந்த ஆண்டு மரண தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 113 ஆக உயர்ந்தது. இதை அறிந்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை அதிர்ச்சி அடைந்துள்ளார்.

# 20,000 இணையத்தளங்களை முடக்கியது பாகிஸ்தான்

யூடியுப் உள்ளடங்கலாக 20,000 இணையத்தளங்களை பாகிஸ்தான் அதிகாரிகள் முடக்கியுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

“இனஸன்ஸ் ஒப் முஸ்லிம்” திரைப்படம் போன்ற ஆட்சேபனைக்குரிய விடயங்களை இணையத் தளங்களில் வெளியிடுவதால் இவ்வாறான இணையத்தளங்களை முடக்கியுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

முஹம்மது நபி (ஸல்) அலைஹி வஸ்ஸலம் அவர்களைக் களங்கப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் போன்ற ஆட்சேபனைக்குரிய விடயங்களை வெளியிடும் 20,000 இணையத்தளங்கள் மற்றும் வலைத்தளங்களை நாங்கள் சட்டபூர்வமாக முடக்கியுள்ளோம் என பாகிஸ்தான் தொலைத்தொடர்புகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நாங்கள் நீதிமன்றத்தின் கட்டளைகளைக் கடுமையாகப் பின்பற்றுகின்றோம் என பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் வெளிநாட்டு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# மக்களுக்கு சேவை செய்ய ஜனாதிபதியாக விரும்பும் சூகி



(ரங்கூன்)

மியான்மரின் ஜனாதிபதியாகி மக்களுக்கு சேவை செய்ய விரும்புவதாக அந்த நாட்டு எதிர்க் கட்சித் தலைவரும் ஜனநாயகம் மலரப் போராடியவருமான ஆங் சாங் சூகி விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றிக் கூறுகையில், தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவராக உள்ள நான், ஜனாதிபதியாகி சேவை செய்ய வேண்டும் என்று மக்கள் நினைப்பதால், நானும் அதையே விரும்புகிறேன். இதற்கு நான் சார்ந்துள்ள கட்சி அனுமதி தருவது அவசியம் என்றார்.

இராணுவ ஆட்சியாளர்களின் பிடியில் இருந்த மியான்மரில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் சூகி அடைக்கப்பட்டிருந்தார். அங்கு ஜனநாயகம் மலர அமைதி வழியில் போராடினார். முன்னாள் இராணுவ ஜெனரலாக இருந்த தியான் சீன் இப்போது ஜனாதிபதியாக உள்ளார்.

மியான்மரில் 2015ஆம் ஆண்டு தேர்தல் நடக்க உள்ள நிலையில், ஜனாதிபதியாக சூகி விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளுக்கு எகிப்தில் பொது மன்னிப்பு

(கெய்ரோ)

எகிப்து சிறையில் உள்ள அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்படும் என எகிப்து ஜனாதிபதி முர்சி தெரிவித்துள்ளார். இது குறித்து ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறியதாவது: கடந்த ஆண்டிலிருந்து எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முபாரக்கிற்கு சாதகமாக இருந்த அரசியல் கைதிகள் தற்போது சிறையில் உள்ளனர். அவர்களுக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்யவுள்ளதாக ஜனாதிபதி முர்சி தெரிவித்திருந்தார்.




இருந்தபோதிலும், எத்தனை பேருக்கு மன்னிப்பு என்பது தெரிவிக்கப்படவில்லை. தற்போது அரசியல் கைதிகளாக 5000 பேர் சிறையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

# இஸ்ரேல் மீது தாக்குதல்; ஹமாஸ் இயக்கம் அறிவிப்பு

இஸ்ரேலுக்குள் ரொக்கெட் தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் இயக்கம் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் குழு தெரிவித்துள்ளன. இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய விமானத் தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த 10 பேர் காயமடைநதனர். இதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன குழுக்கள் அறிவித்துள்ளன.

இதுகுறித்து ஹமாஸ் இஸிடைன் அல்-குவாஸம் படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதிக்கு உட்பட்ட ராபா பகுதியில் சமீபத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலர் காயமடைந்தனர். இதற்கு பதிலடியாக குவாஸம் மற்றும் அல்-குயூஸ் படைப் பிரிவினர் எதிரி நாட்டின் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தினர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அமெரிக்க இராணுவத்தில் அதிகரித்த தற்கொலைகள்

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தினரின் தற்கொலைகளில் 10இல் 6 பேர் தங்களின் தற்காப்பிற்காக வைத்துள்ள துப்பாக்கியால் சுட்டே இறந்துள்ளனர். இதைக் கட்டுப்படுத்த அமெரிக்க அரசு புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ளது.

இந்த வருடம் இதுபோன்று தற்கொலைகள் அதிகரித்துள்ள நிலையில், அவர்கள் வைத்துள்ள துப்பாக்கிகள் மற்றும் போதைப் பொருட்களைப் பாதுகாக்கவோ அல்லது மறைத்து வைககவோ குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் சேவை உறுப்பினர்களிடையே விழிப்புணர்வு பிரசாரம் செய்ய இராணுவத்தில் முயற்சி எடுத்து வருகின்றனர்.

தற்கொலைகள் அதிகரித்துவரும் நிலையில், இதை ஒரு தேசிய பேரழிவாகக் கருதி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பிரச்சினையை தீர்க்க முன்வரவேண்டும் என்று அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான கட்டுப்பாடுகளை அதிகரிக்க வேண்டுமென நாட்டில் பல்வேறு கண்டனக்குரல் எழுபப்பட்டு வருகின்றது. இருப்பினும், இப்பிரச்சினையில் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுக்கு சிக்கல் ஏற்பட்டு உள்ளது.



# சுனிதாவிற்கு ஐஸ்கிறீம் விண்ணிற்கு அனுப்பியது நாசா

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸுக்கு நாசா அமைப்பு ரொக்கெட் மூலம் ஐஸ்கிரீமை அனுப்பி வைத் துள்ளது. விண்ணில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத் தேவையான அறிவியல் சாதனங்களுடன் பால்கன்-9 என்ற ரொக்கெட் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏவப்பட்டது.

இதில், சுனிதா வில்லியம்ஸ் உட்பட மூன்று விண்வெளி வீரர் களுக்கான பொருள்களும், அவர்கள் சாப்பிடுவதற்காக குளிர் சாதனப் பெட்டியில் வனிலா ஐஸ்கிரீம் உள்ளிட்ட உணவுப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த ரொக்கெட்டில் அறிவியல் சாதனங்கள் உட்பட 450 கிலோ எடை கொண்ட பொருட்கள் ஏற்றப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். .்.பால்கன்-9 ரொக்கெட் இன்று சர்வதேச விண்வெளி நிலையத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டதை சுனிதா உள்ளிட்ட மூன்று விண்வெளி வீரர்களும் நேரடியாக வீடியோவில் பார்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த ரொக்கெட்டை வரவேற்கத் தாங்கள் தயாராக இருப்பத்தாக சுனிதா குரல் பதிவுசெய்து அனுப்பிய தகவல், அமெரிக்காவின் ஹூஸ்டனில் உள்ள நாசாவின் ஜான்சன் விண்வெளி நிலையத்தில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு வந்து சேர்நதது குறிப்பிடத்தக்கது.



# போதைப் பொருள் கடத்தல் தலைவன் மெக்சிக்கோவில் கைதானார்

(சான் பெர்னாண்டோ)

மெக்சிக்கோவிலிருந்து மத் திய அமெரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் மக்கள் குடிபெயருவது வழக்கமான ஒன்று. அவ்வாறு சென்ற நிறையப் பேர், சான் பெர்னாண்டோ நகருக்கு அருகில், ரான்சு என்னு மிடத்தில் கொல்லப்பட்டு புதைக் கப் பட்டிருந்தனர். கடந்த 2010 ஆம் ஆண்டில் 72 பேர்களைக் கொலை செய்து ஒரு இடத்தில் புதைக்கப்பட்டிருந்தது தொடர்பாக, அப்பகுதியில் செயற்படும் போதைப் பொருள் ,கடத்தல் கும்பல் மீது புகார் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து நடந்த விசாரணையில், இந்தக் கும்பல் மற்ற நாடுகளுக்கு குடிபெயர விரும்புவர்களைக்கடத்தி, அவர்களைப் போதைப் பொருட்களை விழுங்க சொல்லி அதன் மூலம் போதைப பொருட்களைக் கடத்தி வந்திருககின்றது. அதற்கு மறுப்பவர்கள் கொல்லப்பட்டு அப்பகுதியிலேயே புதைக்கப்பட்டும் வந்துள்ளனர் என்றும் தெரியவந்தது.

இது குறித்து கப்பற்படை நடத்திய அதிரடித் தாக்குதலில், 31 வயதேயான சல்வேடர் அல் போன்ஸா மார்டினெஸ் என்ற அந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவனை அவர்கள் கைது செய்துள்ளனர்.



# விதிகளை மீறும் வாகனங்களை கட்டுப்படுத்துவது யார்?

(திருநெல்வேலி)

வேகக்கட்டுப்பாட்டை வாகனச் சாரதிகள் கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் எனப் பொதுமக்களினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆங்காங்கே வீதிகளில் வேகக்கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகள் போடப்படல் வேண்டும். இவ்வீதியில் இத்தனை கிலோ மீற்றர் வேகத்தில் மட்டும் போகலாம் என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருத்தல் அவசியம். அதனை மீறிச்செல்லும் வாகனங்களின் சாரதிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பதன் மூலம் வாகன விபத்துக்களையும் அதனால் ஏற்படும் மரணங்களையும் தடுக்க முடியும் எனப் பொதுமக்களினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வேகத்தைக் கணிப்பீடு செய்யும் கருவிகள் மூலம் வாகனங்களின் வேகத்தைப் பொலிஸாரினால் கண்டுபிடிக்க முடியும். யாழ்.மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற பல வாகன விபத்துக்களுக்கும், மரணங்களுக்கும் அதிகூடிய கட்டுப்படுத்த முடியாத வேகமே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'அதிகளவு வேகம் மரணத்தை ஏற்படுத்தும்' என்னும் அறிவித்தல்கள் போடப்பட்டும், அதனைப் பார்த்த பின்னரும் காப்பெற் வீதிகளில் கண்மண் தெரியாத வேகத்தில் பல சாரதிகள் தமது வாகனங்களை செலுத்திச் செல்வதைக் காண முடிகின்றது.

பொலிஸாரின் நடவடிக்கைகள் அதிகரித்தால் மட்டுமே வீதி விபத்துக்களையும், அதிவேகத்தையும் கட்டுப்படுத்த முடியும் எனப்பல பொதும்க்களினால் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (137)

# தேசிய மட்ட தடகளப் போட்டி தங்கம் வென்றது அருணோதயா

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் வட மாகாணம் நேற்றைய தினம் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி நேற்று அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

இதில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் பங்குகொண்ட யாழ். இந்துக் கல்லூரி வீரர் ஜஸ்மினன் 7.11 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாமிடத்தை பிடித்துக் கொண்டார். இதன் மூலம் நேற்றைய முதல் நாள் போட்டிகளில் வடமாகாணம் பெற்ற முதல் பதக்கமாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று மாலை நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அருணோதயாக் கல்லூரி வீரர் நிதுசன் 3.50 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

(எஸ்.பி., 93)



கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது கௌரவிக்கப்பட்ட் முன்பள்ளி மாணவர்களுடன் ஆசிரியர்கள் நிற்பதைக் காணலாம்.

## இறுதிப்போரில்....

அமைப்புக்களால் பதிவு செய்யப்பட்டவர்களை இலங்கை அரசால் நினைத்த மாத்திரத்தில் கொல்லமுடிந்திருக்காது. எங்களின் இந்த யோசனை மட்டும் ஏற்கப்பட்டிருந்தால், இறுதிகட்டத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பேர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள். ஏப்ரல் மாதம் இந்தத் திட்டத்தின் இறுதிவடிவத்தை முடிவு செய்வதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேச பேச்சாளர் குமரன் பத்மநாதன் ஒஸ்லோவுக்கு வருவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் பிரபாகரன் அவரை தடுத்துவிட்டார். எங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை பத்திரமாக அழைத்து வருவதற்காக கோலாலம்பூருக்கே சென்றிருந்தனர். ஆனால் இந்தத் திட்டம் தங்களுக்கு ஏற்புடையதல்ல என்று புலிகள் தரப்பில் இருந்து எங்களுக்கு செய்தி சொல்லப்பட்டது. இதனால் எங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை என சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார். லண்டன் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசின் ஒப்புதல் இருந்ததா என்று கேட்டபோது, அந்த நாட்களில் நான் இலங்கைக்கு செல்லவில்லை. ஆனால் ஒஸ்லோவில் இருக்கும் இலங்கைத் தூதரகம் மூலமாகவும், மற்ற தூதரகங்கள் மூலமாகவும் இலங்கை அரச தரப்புடன் எங்களுக்கு இருந்த தொடர்புகள் மூலமாகவும் இலங்கை அரசுடன் நாங்கள் நிறைய பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். அவர்களுடன் பேசியதிலிருந்து முழுமையான இராணுவ ரீதியிலான வெற்றியை பெறுவதே இலங்கை அரசின் பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள் என்கிற உணர்வையே நாங்கள் பெற்றோம். அதேசமயம், விடுதலைப் புலிகள் இந்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியிருந்தால் இலங்கை அரசுக்கு அதற்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழி இருந்திருக்காது என்றே எங்களுக்கு தோன்றியது.

இந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருக்கும் என்று எதை வைத்து நீங்கள் நம்புகிறீர்கள் என்று கேட்டபோது

அவர்களுக்கு இதில் விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய நிலைமையே இருந்தது. காரணம் இந்தியாவும் அமெரிக்காவும் மற்றவர்களும் இதில் உறுதிகாட்டியிருப்பார்கள், ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தினரும் இதில் ஒன்றாகவும் உறுதியாகவும் குரல் கொடுத்திருப்பார்கள். இலங்கை அரசில் தயக்கம் இருந்திருந்தாலும் அவர்களுக்கு வேறு வழி இருந்திருக்காது.

அப்படியானால், இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு முதன்மையான பொறுப்பு விடுதலைப் புலிகளின் தலைமையை சாரும் என்கிறீர்களா என்று கேட்டபோது

ஆம் அப்படித்தான், போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப் போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையிலும் போரை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப்பெரிய வரலாற்று தவறு என்றே நான் நினைக்கிறேன். என்றும் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

## உக்கிரமடைகிறது...

வீட்டு உரிமையாளர்கள் மீது சுகாதாரப் பரிசோதகரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பியன் லேனில் வளவுகள், பொது இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு மூடைகளில் கட்டி வைக்கப்பட்ட குப்பைகள் நல்லூர் பிரதேசசபையின் வாகனங்களில் பதினைந்து தடவைகளுக்கு மேலாக உடனுக்குடன் ஏற்றிச் செல்லப்பட்டன.

சுகாதாரப் பிரிவினால் கொக்குவில் பகுதியில் ஒலிபெருக்கி பூட்டிய வாகனத்தில் டெங்கு தடுப்பு முறை பற்றியும், நுளம்புகள் பெருகாமல் வீடுகளை வைத்திருக்கும் முறை பற்றியும் வழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. (137)

## ஆயுதப் புதையல்...

குண்டுகள் 240, கைக்குண்டுகள், 42) 40 மல்லி மீற்றர் மோட்டார் குண்டும் 08, குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் பியூஸ் வகை 3 பெட்டிகள், கிளைமோர் 2, 12.7 கிராம் ரவைகள் 1615 போன்ற வெடிபொருட்கள் மீட்கப்பட்டு குண்டு அகற்றும் பிரிவினரால் அழிக்கப்பட்டுள்ள தாகவும் யாழ்.உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தமிழகம்...

அண்மையில் தமிழகத்திற்குச் சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களை அடுத்து அங்கு செல்ல இலங்கை பிரஜைகளுக்கு வெளிவிவகார அமைச்சு தடைவிதித்தது.

## வர்த்தக நிலையம் தீயினால் நாசம்

(வவுனியா நிருபர்)

வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கட் வர்த்தக நிலையத்தில் நேற்று அதிகாலை தீப்பற்றியதால் பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

மின் ஒழுக்கினால் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் இத் தீ விபத்தினால் வர்த்தக நிலையத்தில் இருந்த மதுபானசாலை முற்றாக சேதமடைந்துள்ளதுடன் ஏனைய பகுதிகளிலும் மின்சார வயர்கள் எரிந்துள்ளது.

இதன் காரணமாக ஏனைய இடங்களில் கரும்புகை துகள்கள் பரவியுள்ளதுடன் வர்த்தக நிலையம் நேற்று மூடப்பட்டது. தீவிபத்து ஏற்பட்டதை அடுத்து பொலிஸார் விரைந்து வந்து தீயை அனைத்ததுடன் இத் தீ விபத்து தொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## திவிநெகும...

கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இவ்வாறான ஓர் பின்னணியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திவிநெகும சட்டம் தொடர்பான உத்தேச பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

அதேவேளை, திவிநெகும சடடமூல யோசனையை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரல் புத்தகத்தில் உள்ளடக்க அரசாங் கம் தீர்மானித்துள்ளது. சபை முதல்வரின் அலுவலகத்தினால் குறித்த சட்டமூல யோசனை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும் என நாடாளுமன்றத்தின் தகவல்கள் தெரிவித்தன.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி திவிநெகும சட்டமூலம் மாகாண சபைகளில் சமர்ப்பிக்கப்பட்டதால் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா, சட்டமூலத்தை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கினார்.

சகல மாகாண சபைகளிலும் தவிநெகும சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரல் புத்தகத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. சட்ட மூலம் சகல மாகாண சபைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அரசாங்கம் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

அதேவேளை இந்தச் சட்ட மூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் கடைப்பிடித்த நிலைப்பாடு குறித்து சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றினார்.

## முற்றுகிறது...

உள்ளது என்று கடும் தொனியில் தமது அறிக்கையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

தமிழ் மக்கள் சார்பில் சமூக ஆர்வலர்கள், அறிஞர்கள் தமிழ்க் கூட்டமைப்பை நம்பகரமான தலைமைச் சக்தியாக வலுப்படுத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் காலங்கடந்து விடப்படும் வேண்டுகோளாக இருந்தாலும் அவ்வேண்டுகோளை அமுல்படுத்த வேண்டிய கடப்பாடு சகல தமிழ் மக்களுக்கும் உண்டு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தீவிரமாக எடுத்திருக்க வேண்டிய முயற்சி வெற்றியளிக்காமல் போனமைக்கான காரணம் கூட்டமைப்புக்குள் இருக்கும் ஒரு சில சக்திகள் குறுகிய மனப்பான்மையோடு செயற்பட்டதேயாகும்.

தேர்தல் முடிந்ததன் பின் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வழிப்படுத்த தவறியமையும் இன்றைய நிலைக்கு காரணமாகும். தேர்தல் முடிந்தவுடன் சகல கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று அப்போது பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன். என்னைப் பொறுத்தவரை அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற நியாயப்படுத்தக் கூடிய போதிய காரணங்கள் இருந்தும் கூட எதுவித நிபந்தனையுமின்றி தொடர்ந்து வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மூன்று தடவை தமிழர் விடுதலைக் கூட்டணியும் சித்தார்த்தன் தலைமையிலான புளொட்டும் தீவிரமாக தேர்தல் பிரசாரம் செய்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அயராது உழைத்தோம்.

கூட்டமைப்பின் மானத்தைக் காப்பாற்ற இரண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் நிராகரிக்கப்பட இருந்த வேட்பு மனுக்களைத் தப்பவைத்து அவ்விரு சபைகளிலும் ஆட்சியை அமைத்தோம்.

தீவிரப் போக்குக் கொண்ட ஒரு சிலரின் செயற்பாடுகள் எம்மை நோகடித்திருந்தும் மக்களுக்காக அத்தனையையும் தாங்கிக் கொண்டு ஒற்றுமையை வலியுறுத்தி வந்துள்ளோம்.

கூட்டமைப்புக் கட்சிகளைப் பயன்படுத்தி பொது வேட்பாளர்ளாக போட்டியிட்டு வென்றவர்கள் சிலரைக் குறிப்பிட்ட ஒரு கட்சி தனது அங்கத்தவராகச் சேர்த்தமை ஏனைய கட்சிகளின் தோளில் ஏறி சவாரி விடுதல் போலாகிறது.

பெயரளவில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்குகிறதே தவிர இரண்டு வருடங்களில் எச்சந்தர்ப்பத்திலும் எம்முடன் எதுவித கலந்தாலோசனையும் நடத்தாமல் ஏதேச்சதிகாரமாக செயற்படுகின்றனர். ஆனால் பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பு முற்று முழுதாக ஏற்க முடியாத கருத்துக்களை வெளியிட்டபோதெல்லாம் மக்கள் நலன்கருதி நாம் மௌனம் சாதித்து ஏனையவர்களுக்குச் சேர வேண்டிய அவப்பெயரை நாம் ஏற்றுப் பங்குகொள்ள வேண்டி இருந்தது.

1972 இல் இருந்த நிலையிலும் பார்க்க பல மடங்கு மோசமாகத் தற்போது தமிழர் நிலை மாறியுள்ள இன்றைய நிலையில் மேலும் எமது மக்களின் இன்னல்கள் அதிகரிக்கும் என்பதால் மிகச் சிரமப்பட்டு மௌனம் காக்கின்றோம்.

நாட்டின் நிலைமை அறியாத சிலர் சுயநல நோக்கோடு செயற்படும் வேளையிலும், நிலைமைகளைத் தெளிவாக அறிந்த நாங்கள் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்து மக்களின் நிரந்தரத்தீர்வுக்கு உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவர்...

யவர்கள் யாரென்று தெரியாது என்றும், இவ்விடயம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாக்காளர் இடாப்பில் இணைந்துகொள்ள மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது




(கொழும்பு)

2012 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் பெயர் பட்டியல் தொடர்பான மேன் முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வாக்காளர்கள் தமது மேன முறையீடுகளை சமர்ப்பிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத நாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, வாக்காளர் பெயர்பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் 2012 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் காணப்படுவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

வாக்காளர்களின் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படாதவிடத்து மாவட்ட தேர்தல்கள் செயலகத்திற்கு அது தொடர்பில் தெரியப்படுத்த முடியுமென அவர் சுட்டிக்காட்டினார்.

2012 ஆம் ஆண்டிற்கான வாக காளர் இடாப்பில் வாக்காளர்கள் தமது பெயர்களை இணைத்துக் கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாய க்க குறிப்பிட்டார்.

# கூட்டுறவுச் சங்கத்தில் முறைகேடு ஆணையாளருக்கு முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் பல்வேறு முறைக்கேடுகள் இடம் பெறுவதாகவும் அதற்கு தீர்வு காணுமாறும் கோரி வட மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு 48 பேர் கையொப்பம் இட்டு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் குழுத் தலைவர் மற்றும் செயலாளர் என முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சட்டரீதியிலான முறைப்பாடுகள் மற்றும் நிதி தொடர்பான முறைப்பாடுகள் உட்பட 9 குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதுடன் அவை தொடர்பாக தீர்வினையும் வேண்டியுள்ளனர்.

இதேவேளை இக்கடிதத்தின் பிரதிகளை வட மாகாண ஆளுனர் மற்றும் வவுனியா அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளனர். (160)

# பொதுக்கூட்டம்

(கொழும்பு)

வவுனியா பொழுதுபோக்கு கழகத்தின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 20 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் தலைவர் றோய் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கழகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதுடன் மற்றும் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறவுள்ளமையினால் அனைத்து கழக அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரியுள்ளதுடன் பதிதாக அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளவுள்ளவர்கள் அன்றைய தினம் சமூகமளித்து தமது அங்கத்துவத்தை பதிவுசெய்து கொள்ளுமாறும் கழக வளர்ச்சிக்கான கருத்துக்களை முன்வைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் மாலினி



(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ முன்னிலையில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக பிரபல நடிகை மாலினி பொன்சேகா நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அண்மையில் தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே நேற்று நாடாளுமன்றம் கூடியபோது, மீண்டும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் மாலினி பொன்சேகா.

## பேச்சாளராக ஜெயக்கொடி

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாத் ஜயக்கொடி மீண்டும் பொலிஸ் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பேச்சாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன அம்பாறை பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்விருவரும் தமது கடமைகளை இன்று பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# வவுனியா மாணவி கணிதப் போட்டிக்கு தெரிவு

(கொழும்பு)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவியான செல்வி சர்மிகா சர்வானந்தன் 2012 ஆம் ஆண்டிற்கான சர்வதேச 'ஒலிம்பியாட்' கணிதப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இந்தியாவின் உத்திரப் பிரதேசத்தில் உள்ள லக்னோ நகரில் நடைபெறவுள்ள சர்வதேச 'ஒலிம்பியாட்' போட்டிக்கு செல்லும் இவர் 2012 ஆம் ஆண்டு கனிஷ்ட பிரிவின் கணித புதிர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# இருமல் மருந்துக்கு உடனடித் தடை



(கொழும்பு)

"கொரெக்ஸ்-டி" என்ற விநியோகப் பெயரைக் கொண்ட இருமல் மருந்தினை உடனடியாகத் தடை செய்வதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வகை மருந்தினை அதிகளவில் உட்கொண்ட அறுவர் உயிரிழந்தமை தொடர்பிலேயே இவ்வுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# வாகன விபத்து; மூவர் பலி

(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதி, வேவல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகனவிபத்துச் சம்பவமொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர். குறித்த பிரதேச்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியொன்றும லொறி ஒன்றும் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது, முச்சக்கர வண்டியில் பயணித்த வாஸ்து நிபுணர்கள் மூவருமே உயிரிழந்துள்ளனர். இவர்கள் மாலபே, பிளியந்தல மற்றும் ராகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வேவல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொய்ப் பிரசாரங்கள் தூய பணியைத் தடுக்காது

(யாழ்ப்பாணம்)

சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பினர் பயணித்த வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட கழிவு ஓயில் வீச்சுச் சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

முன்னிலை சோசலிஷக் கட்சிக்கு ஆதரவான இப் பெண்கள் அமைப்பினர் பயணித்த வாகனம் யாழ். நல்லூர் பின் வீதியில் சென்றுகொண்டிருந்த சமயம், சில விஷமிகளால் கழிவு ஓயில் வீச்சுக்கு இலக்காகியிருந்தது.


இச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி.யின் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இது போன்ற பல கழிவு ஓயில் வீச்சுச் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு நடைபெற்றதும் எமது கட்சியின் பெயரைத் தொடர்புபடுத்தி எமக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதில் சில ஊடகங்கள் எப்போதுமே குறியாக இருந்து வருகின்றன.

குறித்த பெண்கள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த சிறுவர் தின நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பில் இருந்து வந்திருந்தனர். இவர்களுக்கு எதிராக எத்தகைய பலப்பிரயோகத்தையும் பிரயோகிக்க வேண்டிய தேவை எவருக்குமே இல்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை நீண்டகாலப் போர் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதை அடுத்து முன்னெப்போதும் இல்லாத வகையில் அபிவிருத்தியையும், அதனூடான வளர்ச்சியையும் எமது மக்கள் கண்டு வருகிறார்கள்.

இன்று வடக்குக் கிழக்கில் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்திகளுக்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மட்டுமன்றி நாட்டிற்கு வெளியேயும் கூட இந்த அபிவிருத்திகளை எதிர்மறையாகச் சிந்தித்துக் கருத்துக்களை வெளியிடுவதில் சில சக்திகள் தீவிரமாக இருந்து வருகின்றன.

கடந்த காலங்களில் எமது மக்களின் விடுதலைக்காக எனக் கூறிக்கொண்டு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் எமது மக்களின் நலன்களுக்கு விரோதமாகவே சென்றுள்ள நிலையில், அரசுடன் இணக்கமானதொரு சூழலை ஏற்படுத்திக்கொண்டு எமது மக்களுக்காக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுவரும் அயரா முயற்சிகளை விரும்பாத சக்திகளே இவ்வாறான செயல்களை மேற்கொண்டு வருகின்றன.



இதன் மூலம் குடா நாட்டில் அமைதியற்ற சூழல் நிலவுவதாகக் கூறிக்கொண்டு நடைபெறும் அபிவிருத்திப் பணிகளை இடைநடுவில் நிறுத்தி புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிப்பது இவர்களின் நோக்கமாகும்.

எத்தகைய இடர்கள் வரினும் மக்களுக்கான எமது பணிகள் தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுக கப்படும் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்வதுடன், எமது பணி முறைமையின் ஊடாக சரியான அரசியல் தலைமை ஒன்றையும் எமது மக்கள் இனங்கண்டு அதனை உறுதியாகப் பின்தொடர்வர் என்றும் தாம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் தீ விபத்து மதுபானசாலை நாசம்

வவுனியா பிரதேசத்திலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இத் தீயின காரணமாக விற்பனை நிலையத்தில் இருந்த மதுபானங்கள் அனைத்தும் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தீ ஏற்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.